விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 145 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 29 ஞாயிற்றுக்கிழமை (12.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### முள்ளிவாய்க்கால் கஞ்சி
## சிங்களப் பொதுமக்களும் ஆர்வத்துடன் பருகினர்



(மன்னார்)

மன்னார் பள்ளிமுனைப் பகுதியில் நேற்று முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கப் பட்டது.

இந்நிலையில் 04

## தமிழினப் படுகொலை நினைவேந்தலுக்கு அணிதிரள்க
### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு அழைப்பு

(முல்லைத்தீவு)

தமிழினப் படுகொலையான முள்ளி வாய்க்கால் இனப் படுகொலை நினை வேந்தலுக்கு அனைவரையும் அணி திரளுமாறு வடக்கு-கிழக்கு முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழினப்படுகொலையின் 15 ஆவது ஆண்டின் நினைவேந்தல் நிகழ்வுக்காக முள்ளிவாய்க் 19

### தமிழினப் படுகொலையான
# முள்ளிவாய்க்கால் வாரம்
# நாளை ஆரம்பம்

(முல்லைத்தீவு)

தமிழினப் படுகொலையான முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் வாரம் நாளை ஆரம்பமாகவுள்ளது. முள்ளி வாய்க்கால் நினைவை முன்னிட்டு தமிழர் தாயகத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்பட்டு வரு கின்றது. *(19ஆம் பக்கம் பார்க்க)*




## தீ மூட்டியதில் பெண் படுகாயம்
### மந்துவிலில் சம்பவம்

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்து வில் பகுதியில் தீ மூட்டியதில் குடும்பப் பெண் ஒரு வர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. 19

### குளித்துக் கொண்டிருந்த
## யுவதிகளை வீடியோ எடுத்தவர் நையப்புடைப்பு
### முத்தையன்கட்டில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, முத்தையன்கட்டுப் பகுதியில் வாய்க்காலில் குளித்துக் கொண்டிருந்த பல்கலைக் கழக மாணவிகளை கையடக்கத் தொலைபேசியில் வீடியோ எடுத்த இளைஞன் ஒருவரை மாணவிகளும் அவ்வூர் இளைஞர்கள் 19

## யாழில் குழந்தை பிரசவித்த 15 வயதுடைய சிறுமி
### சிறுமி, சிறுமியின் தாய் தலைமறைவு பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழில் குழந்தையை பிர சவித்த 15 வயது பாடசாலைச் சிறுமி ஒருவர் குழந்தையை வைத்தியசாலையிலேயே விட்டுவிட்டு சென்ற சம்பவம் யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையில் இடம்பெற்றுள் ளது.

வடமராட்சி துன் 19

## பெரமுனவின் அரசியல் செயற்பாடு நாமலிடம் கேட்டறிந்த அமெ. தூதுவர்

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் அரசியல்செயற்பாடுகள்தொடர் பில் நாமலிடம் கேட்டறிந்தார் அமெரிக்கத் தூதுவர்.

இலங்கைக்கான அமெரிக் கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவின் தேசிய அமைப் பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகி யோருக்கிடையில் சந்திப் பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கை மற்றும் அமெ ரிக்காவுக்கிடையிலான உறவை வலுப் படுத்துவது தொடர்பான பேச் 19



### வவுனியாவில் 15 வயது சிறுமி
## கூட்டு வன்புணர்வு
### 20 வயதுடைய பெண் உட்பட நால்வர் கைது

(வவுனியா)

வவுனியா, தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன் றில் வைத்து 15 வயது சிறுமி கூட்டு வன்புணர்வுக்கு உட் படுத்தப்பட்ட சம்பவம் தொடர் பில் 20 வயதுப் பெண் உட்பட நான்கு பேர் 19

### ஐக்கிய அமீரகத்தின்
## இளவரசர் காலமானார்


19

### யுக்திய சோதனை
## ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் கைது

(கொழும்பு)

பொலிஸாரினால் ஆரம்பிக் கப்பட்ட யுக்திய சோதனை நட வடிக்கையில், இதுவரை ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 074 சந்தேக நபர் கள் இதுவரை கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊட கப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுவலக வேலையாள் தேவை

- Office Admin
- கடிதம் எழுதுதல்
- typing
- ஆவணங்கள் சரிபார்த்தல் மற்றும் தயார்ப்படுத்தல்

இது தொடர்பாக அனுபவம் உள்ளவர்களும், A/L அல்லது பல்கலைக்கழகத்தில் படித்த நபர் தேவை. (C-0346)

**070 223 3344**

## பெண் வேலையாட்கள் தேவை

இருபாலைச் சந்தி, கோப்பாயில் இயங்கிவரும் புத்தக, போட்டோகொப்பி கடைக்கு அனுபவமுள்ள/ அனுபவமற்ற பெண் ஊழியர்கள் தேவை!!!

தொடர்புகளுக்கு (732)

**076 832 3682**

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்திலுள்ள எமது கட்டிட நிறுவன அலுவலகத்திற்கு QS. Draughtsman, 3D Design அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. (719)

தொடர்புகளுக்கு:
072 422 5531
075 922 5531, 070 722 5531

வலம்புரி விளம்பரத் தொடர்புக்கு
076 636 3378 | 076 097 3127


# Obituary



Born 06 . 05 . 1958

Died 08 . 05 . 2024

It is with profound grief we annonce the death of Mr. Gérard Robuchon, Director of Alliance Francaise de Jaffna. The last rites will be held at St.Mary's Cathedral on 13.05.2024 at 10.00 am.

# Nécrologie

C'est avec une profonde tritesse que nous vous annonçons le décés de M. Gérard Robuchon, directeur de l'alliance française de Jaffna. Les derniers rites auront lieu à la Cathédrale Sainte - Marie le 13.05.2024 à 10h00

**Members of Alliance française de Jaffna**

(727)


## வீடு வாடகைக்கு தேவை

விருந்தினர் உணவகம் ஒன்று அமைப்பதற்கு ஏற்றவாறான வீடு வாடகைக்கு தேவை. (C-0344)

**076 187 4567**

## துபாயில் வேலைவாய்ப்பு

துபாய் நாட்டில் உள்ள அச்சகம் ஒன்றிற்கு வேலை ஆட்கள் தேவை. (728)

**076 262 5364**
**070 621 3903**

## காணி விற்பனைக்கு

கீரிமலை பொன்னாலை பிரதான வீதியில் 17 பரப்பு காணி 18 மாதங்கள் நிரம்பிய சுமார் 220 தென்னை, 2 வெட்டு கிணறுகளும், 1 குழாய் கிணறும், நீர்ப் பாசனத்துக்காக குழாய்களும் பொருத்தப்பட்டுள்ளது. மின்சார இணைப்பு முட்கம்பி வேலி/ தூண் கிளுவை/ பூவரசு கதியால் இவ்விடம் பிரதான வீதியில் அமைந்துள்ளதால், கடை, Hostel B&B Camping Area போன்றவற்றிக்கும் உகந்த இடத்தில் அமைந்துள்ளது.

- கடற்கரையோடு சேர்ந்த காணியாகவும்
- கீரிமலை கோயிலில் இருந்து 600M தூரமும்
- மாவிட்டபுரம் சந்தியில் இருந்து 3KM தூரமும்
- KKS ஹோட்டலில் இருந்து 4KM தூரமும்
- பலாலி விமான நிலையத்தில் இருந்து 6KM தூரமும்
- சேந்தாங்குளம் சந்தியில் இருந்து 600M தூரமும்
- கடற்கரையோடு சேர்ந்த நல்ல சிறந்த சூழலில் இக் காணி காணப்படுகின்றது.
- கீரிமலை யாழ்ப்பாணம் போக்குவரத்து 788 பஸ் பிரதான வீதி

(730)

**00393511121314**
**076 840 4112, 077 851 5984**
**00393510500000**

## வேலையாட்கள் தேவை

அல்லைப்பிட்டியில் இயங்கும் விடுதி ஒன்றுக்கு காணி பராமரிப்புக்கு ஆண் தொழிலாளி தேவை. (714)

**077 730 4013**

## வேலையாட்கள் தேவை

பளையில் இயங்கும் தும்புத் தொழிற்சாலைக்கு தங்கி இருந்து வேலை செய்ய வேலையாட்கள் தேவை.
ஆண்கள் - 1800/=
பெண்கள் - 1300/=
(729)

தொடர்புகளுக்கு:
**077 365 6826**


# மரண அறிவித்தல்

## குமாரசாமி கிருபாகரமூர்த்தி

(ஓய்வு நிலை ஆசிரியர் – வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்)



புத்தூர் வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி கிருபாகர மூர்த்தி அவர்கள் 09.05 2024 அன்று காலமானார்.

அன்னார் அமரர் குமாரசாமி (ஓய்வு நிலை உப அதிபர்) சுபத்திரையம்மா தம்பதிகளின் அன்பு மகனும் வேலுப்பிள்ளை மகேஸ்வரி அவர்களின் அன்பு மருமகனும் கௌரி அவர்களின் பாசமிகு கணவரும் பதுமிகா (மாணவி கொக்குவில் இந்து கல்லூரி தரம் 11), பதுமிகன் (மாணவன் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி தரம் 9), பாதுசன் (மாணவன் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம், தரம் 8) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் கணேஷமூர்த்தி, பாஸ்கரமூர்த்தி (நோர்வே), புண்ணியமூர்த்தி, சத்தியபாமா (ஆசிரியை- வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்), பிரபாகரமூர்த்தி (பிரதேச செயலாளர், மருதங்கேணி), சத்தியறஜனி (ஆசிரியை-வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்), கானமூர்த்தி (பட்டயப் பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சதீஸ்வரி (நோர்வே), தவகுமார், சிவதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்), சந்திரகோபன் (மின்சார சபை சுன்னாகம்), தாட்சாயினி (லண்டன்), நந்தகுமார், பகீரதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நித்தியபாமா, சிவமலர் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் பிரதீனா(நோர்வே), திபேரன்(நோர்வே), ரதினியா(நோர்வே) ஆகியோரின் சிறிய தந்தையும் பவகரன், பவநிதா, மதுமிதா(லண்டன்), மதுசாரா, (லண்டன்) ஆகியோரின் பெரிய தந்தையும் பவித்திரன், ஆர்த்திகன், ஆராதனா, சஹானா, நளாயினி, சாகினி, அர்ச்சனா, அபிசயனி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.05.2024) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு வாதரவத்தையில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத் திற்காக வாதரவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
வாதரவத்தை, புத்தூர். [illegible]
077 852 7034 (733)


## கார் விற்பனைக்கு

இல. GN----
உடைய நிஷான் மார்க் கார் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு (C-0342)

**077 429 0116**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதிக்கு அருகாமையில் 4 பரப்பு காணியும், 4 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தொடர்பு கொள்ள தேவையில்லை. (725)

தொடர்புகளுக்கு:
**077 3686 186**

## நாகபூஷணி திருமண சேவை

**50% கட்டணக் கழிவு**

(05.05.2024 முதல் 15.05.2024 வரை) பல்லாயிரக் கணக்கில் மணமக்கள் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து நீங்கள் விரும்பும் மணமக்களை மிக துரிதமாக திருமணம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

**10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

(யாழ் வேம்படிச் சந்திக்கு அருகில் BCAS Campus க்கு பக்கத்து லேன்) (731)

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**


# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **தெ. சசீந்திரன்** அவர்களுடைய அன்புத் தந்தையார்

## விசாகரத்தினம் ஐயர் தெய்வேந்திர ஐயர்

அவர்கள் 10.05.2024 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மறைவு 10.05.2024

பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-0345)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக் கூறலுக்கு இலங்கையை உட்படுத்துவேன்

## இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக நியமிக்கப்படவுள்ள எலிசபெத்



**(வோஷிங்டன்)**

**இலங்கையில் பொறுப்புக்கூறல், உண்மை, நல்லிணக்கம், நீதி போன்றவற்றிற்கு ஆதரவளிப்பேன் என இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக நியமிக்கப்படவுள்ள எலிசபெத் கே கோர்ஸ்ட் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்க செனெட்டின் வெளிவிவகார குழுவின் முன்னிலையில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் புறக்கணிக்கப்பட்ட சமூகங்களிற்கு ஆதரவளிக்க தயாராகவுள்ளேன். உண்மை, நீதி நல்லிணக்கம் பொறுப்புக்கூறலிற்கு நான் ஆதரவளிப்பேன் எனவும் சர்வதேச தராதரத்திற்கு அனைவரையும் பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்துவேன் எனவும் எலிசபெத் கே கோர்ஸ்ட் தெரிவித்துள்ளார். (நி-6)

### வெசாக்கை முன்னிட்டு மதுபானசாலைகள் மூடல்

(கொழும்பு)

வெசாக் பண்டிகைக் காலத்தில் மிருகவதை, இறைச்சி விற்பனை மதுபான பாவனை போன்ற செயல்களுக்கு தடைவிதித்து எதிர்வரும் மே 22, 23, 24 ஆம் திகதிகளில் மதுபான மற்றும் இறைச்சி விற்பனை நிலையங்களை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வருட அரச வெசாக் விழாவை மாத்தளை மாவட்டத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள நிலையில் முன்னேற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

இதன்படி மே மாதம் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான காலப் பகுதி வெசாக் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## அதிக சூரிய ஒளியால் கண்களுக்கு பாதிப்பு

(கொழும்பு)


தற்போதைய அதிக சூரிய ஒளி கண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதால் வெளியே செல்லும் போது கறுப்புக் கண்ணாடி அணிந்து செல்வது மிகவும் பொருத்தமானது என சுகாதார அமைச்சின் மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் ஊட்டச்சத்து நிபுணர் வைத்தியர் ரேணுகா ஜயதிஸ்ஸ நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த நாட்களில் அதிகபடியான வெயிலும் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் என்பதால், சருமத்தில் சூரிய ஒளி ஊடுருவாமல் தடுக்கும் கிரீம்களை பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மருத்துவரின் ஆலோசனைக்கமைய அதனை செய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். மேலும், தற்போதைய அதிக வெப்பம் காரணமாக, இரண்டரை லீற்றர் தண்ணீர் குடிப்பது மிகவும் பொருத்தமானது.

மேலும், தரப்பூசணி, ஒரேஞ், வெள்ளரி போன்றவற்றில் பானங்கள் தயாரிப்பது மிகவும் பொருத்தமானது என அவர் கூறியுள்ளார். போதுமான அளவு தண்ணீர் குடிக்காததால் சிலர் மயக்கமடைந்து விடுகிறார்கள். (நி-6)

## 2 ஆம் ஆண்டு — நீங்கா நினைவலைகள் — 3 ஆம் ஆண்டு



அமரர். பாலசுப்பிரமணியம் நிபோஜன்
பிறப்பு: 21.09.1998
இறப்பு: 12.05.2022

மண் விட்டுப் போனாலும்
எங்கள் கண்களுக்குள் வாழ்வீர்
பாலசுப்பிரமணியம் நிபோஜன்
பாலசுப்பிரமணியம் நிபோஜனா
நேற்று வரை எங்கள் முற்றத்தில் பூத்திருந்த
முழு நிலவுகளைக் காணவில்லை....
நீரூற்றி நாங்கள் நட்டு வைத்த பூ மரத்தை
வேரோடு சாய்த்து விட்ட காலனுக்கும்
கண்களில்லை...
வேர் விட்டு நீங்கள் விழுதெறிந்து
பெரு விருட்சமென எமக்கு நிழல் கொடுப்பீர்
என்றிருந்தோம்....
காற்றோடு வந்து காலன் கடுகதியாய் உமை
அழைத்துச் சென்ற மாயம் என்ன?
திரும்பும் இடமெல்லாம் உங்கள் திரு உருவம்
தெரிகிறது.....
ஆறாம் அறிவு ஒன்று நீங்கள் இல்லை
எனச் சொல்ல வேகாத மனம் கூட வெந்து
போகிறது..
ரோஸி என்று நாங்கள் பாசமாய் அழைப்பதற்கு
நீ பக்கத்தில் இல்லை...
நீ இல்லை என்ற துயர் நெஞ்சத்திருக்கையிலே
நிபோஜன் நீ போனாய் நம்மை விட்டு...
தாங்குமோ நெஞ்சங்கள்?
தவிக்கிறது பேரலையாய்...
இடிமேல் இடி இடித்து எங்கள் இதயத்தை
கொல்கிறது நீங்கள் இல்லை என்ற செய்தி
பொய்யாகிப் போகாதோ என்று பேதை மனங்கள்
தவிக்கிறது கண் முன்னே நீங்கள் வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல் கன காலம் இருப்பீர்கள்....

**உங்கள் பிரிவால் துயறுரும் குடும்பத்தினர்.**
**தவில், கீரிமலை.**



அமரர். பாலசுப்பிரமணியம் நிபோஜனா
பிறப்பு: 20.12.2000
இறப்பு: 08.11.2020

(சி-0338)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் 'கிரிக்கெட் நைட்' ரி20 உலகக் கொண்டாட்டம்

கனடாவில் "கிரிக்கெட் நைட்" கொண்டாட்டம் நடக்க உள்ளது. இதில் "ரி20" உலகக் கிண்ணம் அறி முகம் செய்யப்படும். இதில் மே.தீவுகள் வீரர் பிராத்வைட் பங்கேற்கிறார்.

அமெரிக்கா, மே.தீவுகளில் "ரி20" உலகக் கிண்ணத் தொடர் நடக்க உள்ளது. வரும் ஜூன் 1ல் நடக்கும் முதல் போட்டியில் அமெரிக்கா - கனடா அணிகள் மோதுகின்றன.



**முதல் அனுபவம்**

இத்தொடருக்கு கனடா அணி முதல் முறையாக தகுதி பெற்றுள்ளது. இதைக் கொண்டாடும் விதமாக, கனடாவின் புளூ ஜேஸ் பேஸ்போல் அணி சார்பில் ரொரன்ரோவில் "கிரிக்கெட் நைட்" (மே 10) நடக்க உள்ளது. "ரி20" உலக கிண்ணம் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

அணித் தலைவர் சாத் ஜபார் உள்ளிட்ட கனடா அணியின் கிரிக்கெட் வீரர்கள், மே.தீவு வீரர் வீரர் பிராத்வைட் கலந்து கொள்கின்றனர். முதலில் வரும் 15,000 ரசிகர்களுக்கு புளூ ஜேஸ் அணியின் வெள்ளை நிற தொப்பி பரிசாக வழங் கப்படும்.

ரொரன்டோ புளூ ஜேஸ் அணியின் ரசிகர் பிரிவு துணைத் தலைவர் மிச்சல் சினியுக் கூறுகை யில்,

"மக்களை ஒன்றிணைக்கும் சக்தி விளையாட்டுக்கு உண்டு. கிரிக்கெட், பேஸ்போல் விளையாட்டுக்கு என தனிப்பட்ட ரசிகர்கள் பட்டாளம் உலக முழுவதும் உள்ளனர். "கிரிக்கெட் நைட்" கொண்டாட்டத்தில் இவ்விரு போட்டிகளின் ஒற்றுமையை ரசிகர்கள் உணரலாம். ரசிகர்கள் பெருமளவில் பங்கேற்க விரும்புகிறேன், என்றார்.

பிராத்வைட் கூறுகையில்,

"ரொரன்ரோ ரசிகர்களை சந்திக்க ஆர்வமாக உள்ளேன். கிரிக்கெட் கொண்டாட் டத்தில் பங்கேற்று, ரசிகர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கிறேன்," என்றார். (7,10)

## சிங்களப்...

அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சிங்கள பொதுமக்களும் முள்ளி வாய்க்கால் கஞ்சியை ஆர்வத்துடன் பருகினர்.

மன்னார் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பள்ளிமுனை பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் பள்ளிமுனை பெருக்கமரத்துக்கு முன்பாக இடம் பெற்றது.


இதன் பொழுது மன்னார் மாவட்டத்தில் யுத்த காலத்தில் தங்கள் பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள் முப்படையினரால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள் உறவினர்களால் இணைந்து மன்னார் பள்ளிமுனை பகுதியில் முள்ளி வாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.

பள்ளிமுனை பொதுமக்கள், இளைஞர்கள் யுவதிகள் உட்பட அதிகளவான மக்கள் உணர்வுபூர்வமாக முள்ளி வாய்க்கால் கஞ்சியை அருந்தி சென்றனர்

அதே நேரம் அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட சிங்கள மக்களும் முள்ளி வாய்கால் கஞ்சியை ஆர்வத்துடன் அருந்தியமை குறிப்பிடத்தக்கது (ம-7,10, 285)

# தொடக்க வீரராக 'கிங்' ஹோலி

## கங்குலி விருப்பம்



"ரி20 உலக கிண்ணத் தொடரில் துவக்க வீரராக கோலி களமிறங்க வேண்டும்," என கங்குலி தெரிவித்தார்.

ஐ.பி.எல்., தொடரில் பெங்களூரு அணிக்காக அசத்துகிறார் கோலி. தொடக்க வீரராக வரும் இவர், 12 போட்டியில் 634 ஓட்டங்கள் (சராசரி 70.44, "ஸ்டிரைக் ரேட்" 153.51) குவித்து முதலிடத்தில் நீடிக்கிறார். ஹைதராபாத்திற்கு எதிரான போட்டியில் 47 பந்தில் 92 ஓட்டங்களை விளாசினார்.

அடுத்து, அமெரிக்கா, வெஸ்ட் இண்டீசில் நடக்க உள்ள "ரி20" உலக கோப்பை தொடரிலும் (ஜூன் 2-29) தொடக்க வீரராக கோலி வரலாம். இந்திய அணிக்காக இவர், மூன்றாவது இடத்தில் களமிறங்குவது வழக்கம். இதை மாற்றி, தொடக்கத்தில் அணித் தலைவர் ரோகித்-கோலி, மூன்றாவது இடத்தில் சூர்யகுமார், அதை தொடர்ந்து ஷிவம் துபே, ஹர்திக் பாண்ட்யா, ரவிந்திரா ஜடேஜா வந்தால் சிறப்பாக இருக்கும்.

இது குறித்து இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கங்குலி கூறியது:

"ரி20" உலக கோப்பை தொடருக்கு தரமான இந்திய அணி தேர்வு செய்யப் பட்டுள்ளது. உலகின் சிறந்த வேகப் பந்துவீச்சாளரான பும்ரா உள்ளார். சிராஜ், அக்சர் படேல், குல்தீப் என அனுபவ பந்துவீச்சாளர்கள் இடம் பெற்றுள்ளனர். "நவீன "ரி20" போட்டியில் துடுப்பாட்ட வீரர் "செட்டில்" ஆவதற்கு எல்லாம் நேரம் இல்லை. பந்துகளை விளாசிக் கொண்டே இருக்க வேண்டும்" என சமீபத்தில் சாம்சன் கூறினார். இது முற்றிலும் உண்மை தான்.

**சிறிய மைதானம்**

அடித்து விளையாடும் மனநிலையில் துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். ஐ.பி.எல்., தொடரில் "இம்பேக்ட்" வீரர் விதிமுறை காரணமாக கூடுதலாக ஒரு துடுப்பாட்ட வீரரை சேர்க்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இதனால் 250 ஓட்டங்களை சாதாரணமாக எட்டுகின்ற னர். டில்லி, ராஜஸ்தான் மோதிய போட்டியில் 26 சிக்சர்கள் அடிக்கப்பட்டன. இதற்கு பெரும் பாலான இந்திய மைதானங்கள் சிறிய தாக இருப்பது, ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக அமைக்கப்படு வது முக்கிய காரணம்.

**ஆரம்பம் முக்கியம்**

ஐ.பி.எல்., தொடரில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக மிரட்டுகிறார் ஹோலி. ஹைதராபாத்திற்கு எதிராக மின்னல் வேகத்தில் 92 ஓட்டங்களை எட்டினார். வரும் "ரி20" உலக கிண்ணத் தொடரில் இந்திய அணிக்காக ஆரம்ப வீரராக கோலி களமிறங்க வேண்டும். இவ்வாறு கங்குலி கூறினார். (7,10)


## விற்பனைக்கு

பழைய பத்திரிகை
விற்பனைக்கு உண்டு.
மொத்தமாக கொள்வனவு
செய்ய விரும்புபவர்கள்
தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
076 097 3127

## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியூவில்
1 ¾ பரப்பு வீடு
விற்பனைக்குண்டு

தொடர்பு
076 116 3919 (734)


# மரண அறிவித்தல்



## இராசையா யோகராசா

**(மக்கள் வங்கி ஓய்வு நிலை முகாமையாளர்)**

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி நுணாவில் மற்றும் கந்தர்மடம் யாழ்ப்பாணத்தைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா யோகராசா அவர்கள் 11.05.2024 சனிக்கிழமை மாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற நடராசா - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் சிவகாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும் மதனன் (Assistant Director - T.R.C.SL) அவர்களின் பாசமிகு தந்தையும் தனந்திகா (Assistant Registar - Uva Wellassa University) அவர்களின் அன்பு மாமனாரும் பர்ணிகா, கிருத்விகன் ஆகியோரின் அன்புப் பேரனும் செல்லம்மா, தங்கவேலு, நாகேஸ்வரி, சிவலோகநாதன், யோகேஸ்வரி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவராஜா, மோகனாம்பிகை, யோகேஸ்வரன், சச்சிதானந்தன், ஜகதாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.05.2024) இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

225/6, பலாலி வீதி,
கந்தர்மடம்.

தகவல் :
குடும்பத்தினர்
071 445 7457

(C-0349)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையின் சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய திருமதி ஆன் நிலாந்தி லோகு அவர்களின் அன்புத் தந்தையார்



## அமரர் பிரான்சிஸ் சூசைதாசன் லோகு

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம்
வடமாகாணம்.

(0059)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் 01.05.2024-13.04.2025



**செவ்வாயை ராசிநாதனாகக் கொண்ட விருச்சிக ராசி அன்பர்களே!**

நீங்கள் வாக்கிற்கு முக்கியத்துவம் அளிப்பவர்கள். கிரகநிலை - ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து சப்தம ஸ்தானத்திற்கு மாறுகிறார். உங்களது லாப ஸ்தானம் - ராசி ஸ்தானம் - தைரிய ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கிறார்.

**மேஷத்தில் இருந்து ரிஷபத்துக்கு:** நிகழும் மங்களகரமான ஸ்வஸ்தி ஸ்ரீகுரோதி வருஷம் உத்தராயணம் வஸந்த ரிது சித்திரை மாதம் 18 ஆம் நாள் இதற்குச் சரியான ஆங்கிலத் திகதி 01.05.2024 அன்றைய தினம் கிருஷ்ண பக்ஷ அஷ்டமியும் - புதன் கிழமையும் - திருவோண நட்சத்திரமும் - சுப நாமயோகமும் - பவ கரணமும் - சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் மாலை 5.01 இற்கு துலாம் லக்னத்தில் குருபகவான் மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசிக்கு மாறுகிறார்.

போன்ற சுபகாரியங்கள் நடந்தேறும். தெய்வ வழிபாடுகளில் ஈடுபடுவீர்கள். அதேநேரம் சகோதர, சகோதரி வழியில் சிறிது மனத்தாங்கல் ஏற்படலாம். எனவே விட்டுக் கொடுத்து நடந்துகொள்ளவும். அதோடு அநாவசிய வம்பு, வழக்குகளில் ஈடுபட்டு பெயரைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம். மற்றபடி உங்கள் துறையைச் சேர்ந்தவர்கள் தாமாகவே தேடி வந்து நட்புகொள்வார்கள்.

உங்களின் வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்டவர்கள்கூட உங்களுக்கு உதவி செய்யும் காலகட்டமாக இது அமைகிறது. புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள். கடந்த கால கசப்பான அனுபவங்களிலிருந்து விடுபடுவீர்கள். பொருளாதார நிலைமை சீரடையும். சேமிப்பு விடயங்களில் கவனம் செலுத்துவீர்கள். நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளுக்கு ஆதரவாக இருப்பீர்கள். புதிய சொத்துக்களை வாங்கும்போது வில்லங்கம் ஏற்படாத வகையில் கவனமாக வாங்கவும்.

தொழில் ரீதியாக தேவையான பயணங்களைச் செய்வீர்கள். உங்களின் மதிப்பு, மரியாதை உயரும். சிலருக்கு அரசு விருதுகளும், பாராட்டுகளும் கிடைக்கும். சிலருக்கு புதிய வீட்டுக்கு பெயர்ச்சியாகும் வாய்ப்பு கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்கள் வகையில் இருந்த வில்லங்கம் விலகி, சுமுகமான பாகப்பிரிவினை உண்டாகும். பழைய சொத்துக்களும் விற்பனையாகும். இதனால் வங்கிக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவீர்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மருத்துவச்செலவுகள் ஏற்படாது.

ஊர்களுக்கு இட மாற்றம் கிடைக்கும்.

வியாபாரிகள் கொடுக்கல், வாங்கல் விடயங்களில் சிக்கல்களை சந்திப்பீர்கள். அதனால் சிலருக்கு நஷ்டங்கள் உண்டாகலாம். அதேநேரம் கூட்டாளிகள் உங்கள் மீது நம்பிக்கை வைத்து நடந்துகொள்வார்கள். இதனால் உங்களின் செயற்றிறன் அதிகரிக்கும். மற்றபடி புதிய முதலீடுகளை நன்கு யோசித்த பிறகே செய்யவும். அரசியல்வாதிகளுக்கு தடைகள் ஏற்பட்டாலும் திட்டமிட்ட வேலைகள் அனைத்தும் வெற்றியடையும். சமூகத்தில் அந்த




ஸ்தான பதவிகளைப் பெறுவீர்கள். பல வழிகளிலும் வருமானம் பெருகும். தொண்டர்களை அனுசரித்து நடந்து கொள்ளவும். கலைத்துறையினருக்கு புகழும், பாராட்டும் கிடைப்பதில் கால தாமதம் ஏற்படும். திட்டமிட்ட வேலைகளில் பொறுப்புடன் நடந்துகொண்டால் சிரமங்களைத் தவிர்க்கலாம். ரசிகர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். சக கலைஞர்கள் நட்பு பாராட்டுவார்கள்.

பெண்மணிகளுக்கு இது மகிழ்ச்சி நிறைந்த குருப்பெயர்ச்சி. குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். கணவர் உங்களை மதித்து நடப்பார். அவருடனான ஒற்றுமை அதிகரிக்கும். பண வரவு சரளமாகவே

அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழில் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும்.

அனுஷம்: இந்த குருப் பெயர்ச்சியால் குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்தக் கருத்து வேற்றுமை நீங்கும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் மனம் மகிழும்படி தேவையான பொருட்களை வாங்கிக் கொடுப்பீர்கள். விருப்பங்கள் கைகூடும். அக்கம் பக்கத்தினருடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். மனம் மகிழும்படியான காரியங்கள் நடக்கும். ஆன்மீக நாட்டம் ஏற்படும். ஆன்மீக ஸ்தலங்களுக்கு சென்று வரும் வாய்ப்பு கிடைக்கும். எதிர்பார்த்த நன்மைகள் நடக்கும். வேலை நிமித்தமாக வெளிநாட்டிற்கு பயணம் செல்ல வேண்டி வரலாம். உங்கள் திறமைகளுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

கேட்டை: இந்த குருப் பெயர்ச்சியால் பூமிசம்பந்தமான துறையினருக்கு லாபம் உண்டாகும். விற்பனை அதிகரிக்கும். மேலிடத்தின் ஆதரவைப் பெறுவீர்கள். ஆனால் அதன் முழுப்பலன்களையும் அனுபவிக்க இயலாத அளவிற்கு மற்றவர்களால் சிறு குறுக்கீடுகளும் தோன்றும். மனம் தளராமல் எதிரிகளைச் சமாளிப்பீர்கள். கடினமான வேலைகளையும் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். புதிய பொறுப்புகளையும் பெறுவீர்கள். பயணங்களால் நன்மைகள் உண்டாகும். கவனமாக பேசுவது அவசியம். உங்களின் எதார்த்தமான வார்த்தைகள் பூதாகரமான பிரச்சினைகளை உண்டாக்கலாம்.

**பரிகாரம்:** துர்க்கை அம்மனை செவ்வாய்க்கிழமைகளில் பூஜை செய்து வழிபட எதிர்ப்புகள் நீங்கும். தைரியம் கூடும். பணவரத்து திருப்தி தரும். **சிறப்பு பரிகாரம்:** செவ்வரளி மாலையை செவ்வாய்கிழமை தோறும் அருகிலிருக்கும் அம்மன் கோவிலுக்கு அர்ப்பணித்து அர்ச்சனை செய்து வணங்கவும்.

**சொல்ல வேண்டிய மந்திரம்:** "ஓம் ஸ்ரீம் துர்க்காயை நம" என்ற மந்திரத்தை தினமும் 9 முறை சொல்லவும் **அதிஷ்ட எண்கள்:** 1. 3. 7. 9 ; **அதிஷ்ட ஹோரைகள்:** ஞாயிறு, செவ்வாய், குரு **அதிஷ்ட திசைகள்:** மேற்கு, தெற்கு ; **அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய், வியாழன்

## ஆன்மீகத்தில் நாட்டம் உண்டாகும்

**விருச்சிகம் ராசியினருக்கான குருப்பெயர்ச்சி பலன்கள்:** இந்த குருப் பெயர்ச்சியில் உங்கள் வேலைகளை தன்னடக்கத்துடன் செய்து முடிப்பீர்கள். சமுதாயத்தில் உங்களின் நிலையை உயர்த்திக் கொள்வதற்கு ஏதுவான நல்ல காரியங்களைச் செய்வீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை அதிகரிக்கும். இந்த பெயர்ச்சியால் வருமானம் சீராக இருக்கும். வீடு, வாகனம் ஆகியவற்றை வாங்குவீர்கள்.

இல்லத்திற்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். எதிர்வரும் இடையூறுகளை முன்கூட்டியே உணர்ந்து அதற்கேற்ப செயல் முறைகளை மாற்றிக்கொள்வீர்கள். இல்லத்தில் தடைப்பட்டிருந்த திருமணம்

குடும்பத்தார் உங்களுடன் விட்டுக் கொடுத்துப் பழகுவார்கள். உங்கள் தோற்றத்தில் வசீகரம் உண்டாகும். நீண்ட காலமாக தடைபட்டு வந்த குழந்தை பாக்கியம் இந்தக் காலகட்டத்தில் கிடைக்கும். பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிப் படிக்க வைப்பீர்கள். எவருக்கும் இந்தக் காலகட்டத்தில் உங்கள் பெயரில் பணம் வாங்கித் தர வேண்டாம். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரித்தாலும் உங்கள் செயல்களை செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு நேசக்கரம் நீட்டுவார்கள். அலுவலக ரீதியான பயணங்களின் மூலம் ஓரளவுக்குத்தான் நன்மைகள் கிடைக்கும். மற்றபடி உங்கள் கௌரவத்துக்கு எந்தப் பங்கமும் ஏற்படாது. சிலருக்கு விரும்பிய

இருக்கும். ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

மாணவமணிகளுக்கு படிப்பில் ஈடுபாடு அதிகரிக்கும். விளையாட்டுகளில் பங்கேற்று வெற்றி பெறுவீர்கள். சீரிய முயற்சி செய்தால் மேலும் மதிப்பெண்களை அள்ளலாம். பெற்றோர் ஆதரவாக இருப்பார்கள்.

விசாகம் 4: இந்த குருப் பெயர்ச்சியால் வாழ்வு வளம் பெறும். துணிச்சலாக காரியங்களில் ஈடுபடுவீர்கள். நியாயமாகவும், நேர்மையாகவும எல்லா காரியங்களையும் செய்து முடிப்பீர்கள். வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். பயணங்கள் மூலம் லாபம் கிடைக்க செய்யும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும் படியான காரியங்கள் நடக்கும். ஆன்மீகத்தில் நாட்டம் உண்டாகும். மனோ தைரியம்

(தொடரும்)

# இராசிபலன்

12.05.2024
சித்திரை 29, ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 5.28 மணிவரை

திருவாதிரை பிற்பகல் 1.38 மணிவரை
சுபநேரம் 8.54-10.24 மணிவரை
இராகுகாலம்4.24-5.54 மணிவரை

அன்னையர்தினம்.
சந்திராஷ்டமம் -
சுவாதி,விசாகம்.

வளவன்




உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள்.




பொதுவாழ்வில் புகழ் கூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், அலங்காரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும் , வாக்கு மேன்மையுண்டு.




வழிபாட்டால் பெருமைகாண வேண்டிய நாள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் , வாய்ப்புண்டு.




எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், வழிபாடு இன்பம் தரும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள்.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்,செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.




அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வரலாம், கனவுப் பலிதமுண்டு,உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.




பொருளாதார நிலை உயர என்ன வழியென்று யோசிப்பீர்கள்,தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், தடைகள் விலகி காரியம் கைகூடும்.




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வரவைக் காட்டிலும் செலவுகள் கூடலாம்.




குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும்.




உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு.




உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.




எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

இனிய இதமான சொற்களை மட்டுமே பயன்படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் 'நுங்கு விழா'



(மன்னார்)

வன்னி மண் அறக்கட்டளை அனுசரணையுடன் மன்னார் மாவட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனை நிலையத்தின் அமுலாக்கத்துடனும் நுங்கு விழா நேற்று முன்தினம் மன்னாரில் நடைபெற்றது.

நுங்கு விழாவானது பனை மரத்தின் தேவை குறித்தும் பனை மரத்தினால் பெறப்படகூடிய பயன்கள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனை நிலையத்தின் முன்பாக சிறப்பாக இடம்பெற்ற நுங்கு திருவிழாவில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-285)

# உடுவில் பகுதியில் தீப்பற்றிய தென்னை

## காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உடுவில் பகுதியில் மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகி தென்னைமரம் ஒன்று தீ பற்றி எரிந்துள்ளதுடன், நபர் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழில் கடந்த சில வாரங்களாக கடும் வெப்பமான கால நிலை நிலவி வரும் நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உடுவில் பகுதியில் இடி மின்னலுடன் மழை பெய்துள்ளது.

அதன் போது, மின்னல் தாக்கத்தால் வீடொன்றில் இருந்த தென்னை மரம் தீப் பற்றி எரிந்துள்ளதுடன், வீட்டில் இருந்த நபர் ஒருவரும் காயமடைந்துள்ளார். காயமடைந்தவர் சிகிச்சைக்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி-6)






# கோண்டாவில் சிவகாமி அம்பாள் ஆலய கொடியேற்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி சிவகாமி அம்பாள் திருக்கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் உற்சவங்கள் இடம் பெறும்.

இவ் உற்சவங்களில் எதிர் வரும் 22 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் அன்று மாலை 7.30 மணிக்கு கொடியிறக்கத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (நி-6-33)

# வழிப்பறியில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் இருவர் கைது


(யாழ்ப்பாணம்)

யாழில் வழிப்பறியில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் இருவர் வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் அந்நபரை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழில் கடந்த வாரம் வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணொருவரை வழிமறித்து கத்தியை காட்டி அவரது சங்கிலியை மூவர் அடங்கிய வழிப்பறிக் கொள்ளை கும்பல் கொள்ளையடித்து சென்று இருந்தது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த நிலையில், பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் வழிப்பறி கொள்ளை கும்பலை சேர்ந்தவர்கள் எனும் சந்தேகத்தில் இருவரை கைது செய்துள்ளதுடன், வழிப்பறி கொள்ளைக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும், வாள் ஒன்றினையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த வழிப்பறி கொள்ளைக் கும்பலை சேர்ந்த மற்றுமொரு நபர் தலைமறைவாகியுள்ளதாகவும், அவரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்து உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6)



மகாராஜா ஸ்ரீ ராஜசேகரா எழுதிய புண்ணியேஸ்வரம் நூல் வெளியீட்டு விழா கடந்த 5 ஆம் திகதி தெல்லிப்பளை ப.நோ.கூ சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974



நன்றி நவிலல்

Dr.B.இராஜேஸ்வரன்(04.05.2024)

எமது தந்தையாரின் மறைவுச் செய்தி அறிந்து ஆறுதல் கூறி இறுதி நிகழ்வில் நேரடியாக பங்கேற்றியவர்களுக்கும், தொலைபேசி ஊடாக அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும், பத்திரிகைக் கட்டுரைகள், சமூக வலைத்தளப்பதிவுகள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் ஊடாக துயர் பகிர்ந்த அனைத்து உறவினர்கள், நண்பர்கள், அன்னாரின் சக ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் அயலவர்களுக்கும் எமது குடும்ப உறுப்பினர்கள் சார்பான இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். (0057)

மகன்-077 286 7566(இலங்கை)
மகன்- +41763400284(சுவிஸ்)

இங்ஙனம்
மனைவி,பிள்ளைகள்,
மருமகள்கள் மற்றும் பேரன்.



நினைவு கூருகின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர் திருமதி. மிறோஜன் சாருகேசி அவர்களின் அன்புத் தந்தை

அமரர்.அம்பலவாணர் ஜெயராமன்



அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (சி-0339)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி



வீடு வாடகைக்கு தேவை

அரச உத்தியோகம் வகிக்கும் சிறிய குடும்பத்திற்கு யாழ்.நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவைப்படுகின்றது. (சி-0341)

077 395 6158



காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் வடக்கு (G.G.பொன்னம்பலம் வீதி, பலாலி வீதியில் இருந்து 200 m தூரத்தில் 3ஆவது காணி 27 பரப்பு தோட்டக் காணி 5 அரை வீட்டு அத்திவாரத்துடன் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை (722)

தொடர்பு கொள்ள வேண்டிய இல.
076 877 5021



யா/விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி
பழைய மாணவர் சங்கம்(தாய்ச்சங்கம்)

வருடாந்த பொதுக்கூட்டம்

காலம்- 26.05.2024 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்-காலை 9.30 மணி
இடம்- கல்லூரி கேட்போர் கூடம்
தலைவர்- திரு.வ.செல்வராசா

1. பிரேரணைகள் இருப்பின் 20.05.2024 இற்கு முன் சமர்ப்பிக்கவும்
2. வருட அங்கத்தவர்கள் அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளவும்.

(சி-0340)

தங்களுக்கு எழுத்தறிவித்த தங்களை உருவாக்கிய கல்லூரி அன்னையின் மேம்பாட்டுக்கு முதுகெலும்பாக இருக்க வேண்டியவர்கள் தாங்களே. ஆதலால் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு பணிவோடு வேண்டுகின்றோம்.

வ.செல்வராசா,
தலைவர்.

கி.ரவிகுமார்,
செயலாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 440
Viber 076 636 3378



# தமிழர் வரலாறுகள் இளம் சந்ததியிடம் கடத்தப்பட வேண்டும்

> ஒரு காலத்தில் தியாகத்தின் உச்சமாய் இருந்தனர் வடக்கு இளைஞர்கள். தன் இனத்தின் விடிவுக்காக தன்னை ஆகுதியாக்கிய வீரமறவர்களை உருவாக்கிய வீர பூமி இது. துரதிஸ்டம் இன்றைய நிலை அவ்வாறு இல்லை.

குறுகிய ஒரு நிலப்பரப்பு. மனதளவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத குண்டுத்தாக்குதல். நிலத்தில் இருந்து ஒரு அங்குலம் தலையைத் தூக்கினால் கூட தலைசுக்கு நூறாக்கி விடும் அளவில் துப்பாக்கிரவைகள் மரம் செடி கொடிகளை சல்லடை போட்டபடி இருக்கிறது. கந்தகப் புகையுடன் புழுதி சேர்ந்து உயிர் பிச்சைக்காய் நிலத்தில் கிடந்தவர்களின் நுரையீரலை நிறைத்து கரியமிலத்தை கக்குகிறது. எங்கும் மரண ஓலம். எடுத்து கால் வைக்கும் ஒவ்வொரு அடியிலும் உயிரற்ற உடல்கள்.

முள்ளிவாய்க்கால் கடல் அன்னையின் அலைத் தாலாட்டில் வெள்ளைக் கம்பலம் விரித்தாற் போல பரந்து விரிந்து கிடந்த வெள்ளை மணல் இரத்தத்தில் தோய்ந்து செந்நிறமாகிக் கிடந்தது. மணலில் வழிந் தோடிய இரத்தம் கடலில் கலந்திட அதை அலை மீண்டும் கரையில் நுரையால் ஒதுக் கிவிட நுரையின் குமிழ்கள் சிவந்து சிலிர்த் துக் கிடந்தது. இறந்த மனைவியின் உடலை மடியில் ஏந்தி கதறிய கணவன் மீது செல் வந்து விழ அவர் சிதறிப்போன சம்பவங்கள்.

பிள்ளைகளின் தாகம் தீர்க்க பதுங்கு குழியில் இருந்து வெளிவந்த தாய் மீது செல் வீழ்ந்து அவள் சிதறிப்போன நிலை கண்டு பிள்ளைகள் கதறி அழுத காட்சிகள்.

தன் பிள்ளைகளின் உயிரையேனும் காப்பாற்ற வேண்டும் என பதுங்கு குழி வெட்டிய தந்தை குண்டடிபட்டு அங்கேயே இறந்துபோன துயரங்கள். தன் தாய் இறந்து விட்டாள் என்று தெரியாமல் அவள் முலையில் பால் குடித்த மனமுருகும் மழலையின் காட்சிகள்.

வயிற்றில் செல்பட்டு குடல் வெளியே கொட்டிக்கிடக்க தன்னை யாரும் காப்பாற்ற மாட்டார்களா என்று ஏங்கி அலறும் இளைஞனின் பரிதாப நிலை.

இப்படி கற்பனையில் கூட சிந்தித்து பார்க்க முடியாத காட்சிகளின் சாட்சியாக இன்று வரை அகன்று விரிந்து கிடக்கிறது முள்ளி வாய்க்கால் முற்றம்.

தமிழினத்தின் வீர சரித்திரம் முடிவுற்ற அந்த முற்றத்திற்கு மட்டும் வாய் இருந்தால் இன்று தமிழினம் இவ்வளவு அல்லலுற்றிருக்காது.

என்ன சொல்லுவது துரோகங்களின் மொத்த சாட்சியங்களும் தமிழர் மார்பு மீது பாய்த்து விட்டது என்பதை நினைத்து தமிழினம் தனது காலத்தை கடத்துவதை விட வேறு எதைச் செய்துவிட முடியும்.

இறுதி யுத்தம். பயங்கரவாதத்தை அழிப்பதாய் கூறப்பட்டாலும் அங்கு அதிகம் அழிக்கப்பட்டது அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களே என்பது சர்வதேசத்திற்கும் தெரியும்.

ஆயினும் சர்வதேசம் மௌனமாக இருந்தது ஏன் என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. இலங்கை இராணுவத்தின் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் சுமார் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான அப்பாவிப் தமிழ் மக்களின் உயிர் பறிபோனதை சற்றும் சிந்தித்துப் பார்க்காத ஆட்சியாளர்கள்; பயங்கரவாதம் அழிந்து விட்டது, நாட்டில் இனி சமாதானம் மலருமென சர்வதேசத்திற்கு கூறினர்.



அந்தச் செய்தி வெறும் செய்தியாகவே இன்றுவரை இருந்து வருகிறது என்பது தான் வேதனையை உண்டாக்கிறது.

இலங்கையின் வளத்தை சுரண்டுவதற்கான தேவை சர்வதேசத்திற்கு எப்போது ஏற்படுகிறதோ அப்போது போர்குற்ற மீறல்கள் என்ற பதத்தை ஐக்கிய நாடுகள் சபையில் பிரஸ்தாபிப்பது பொதுவாகிப் போய் விட்டது.

போரின் வடுக்களைச் சுமந்தவர்கள் இன்று வரை பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கான நிவாரணங்கள் கூட இன்று வரை அவர்களுக்கு கிடைக்கவில்லை என்பது தான் வேதனை. முள்ளிவாய்க்காலில் எம்மினம் தமது சொந்தங்களை இழந்து துயரத்தில் வாட தெற்கில் பாற்சோறு பொங்கி வெற்றி விழா கொண்டாடினார் என்பதற்குள் இருக்கும் இனத்துவேசத்தை என்னவென்று கூறி விட முடியும்.

15 ஆண்டுகள் கடந்து விட்டன. எம் இனத்திற்கான நீதி இன்றுவரை மறுக்கப் பட்டுக் கொண்டே இருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வுகள் ஆரம்பமாகும் போது மட்டும் மழைக்கு வரும் ஈசல்களாய் ஜெனிவாவிற்குப் படையெடுப்பவர்கள் அதன்பின் மக்களின் நீதிக்காக குரல் கொடுக்கிறார்களா எனின் இல்லை என்பதே உண்மை.

தமிழ் மக்களின் இந்த அவல நிலைக்கு எமது தமிழ்த் தலைவர்களும் பொறுப்பாளிகளே. ஆம், தமது தேர்தல் வெற்றிக்காக மட்டும் உழைக்கும் அவர்களிடம் தமிழினத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற சிந்தனை இல்லை என்று தான் கூற வேண்டும்.

தமிழினத்துக்கு சர்வதேசத்தினூடாக தீர்வைப் பெறும் பொன்னான காலங்களை அவர்கள் மண்ணாக்கினார்கள் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

ஆனாலும் மீண்டும் மீண்டும் அவர்கள் தமிழ் மக்களின் முன்வந்து வாக்குக் கேட்டு வெற்றி பெறுகிறார்கள் என்பதற்குள் இருக்கும் விளைவை புரிந்து கொள்ள முடியவில்லை.

15 ஆண்டுகள் என்பது ஒரு தசாப்தம் கடந்த நிலை. எம் இனம் பட்ட இன்னல்களின் வெளிப்பாடாய் முள்ளி வாய்கால் கஞ்சி முள்ளிவாய்க்கால் வாரத்தில் வழங்கப்படுவது; அடுத்த சந்ததிக்கு எம் இனம்பட்ட இன்னல்களைக் கடந்த வழி வகுக்கும்.

ஒரு காலத்தில் தியாகத்தின் உச்சமாய் இருந்தனர் வடக்கு இளைஞர்கள். தன் இனத்தின் விடிவுக்காக தம்மை ஆகுதியாக்கிய வீரமறவர்களை உருவாக்கிய வீர பூமி இது. துரதிஷ்டம் இன்றைய நிலை அவ்வாறு இல்லை.

போதைவஸ்தின் உச்சம். எம் இளம் சமூகத்தின் குரல் வளையை நசுக்க அது எம் இனத்தின் இருப்பையே கேள்வி குறியாக்கி இருக்கிறது.

மண்பற்று, இனப்பற்று, கொண்ட கொள்கையில் இருந்து சற்றும் தளராமை என்ற பேச்சுக்கே இடமில்லை.

போதைவஸ்தின் அதி உச்ச பாவனை மோட்டார் சைக்கிளை அதி வேகமாக ஓடுவதும் தமக்கு பிடிக்காதவர்களை வாள் கொண்டு வெட்டுவதும்தான் வீரம் என்றாகி விட, வீதியில் தறுதலையாய் நிற்கிறது தமிழினத்தின் இளம் சந்ததி.

இவை மாற வேண்டும். இதற்கு எம் இளம் சந்ததிக்கு எமது வீர வரலாற்றை கடத்த வேண்டும். எமது பண்பாடு-கலாச்சாரம் எப்பேர்ப்பட்டது, எமது இனத்தின் தோற்றம் எவ்வாறானது, அது எங்கே தோற்றுப் போனது, அதன் வீழ்ச்சி எங்கே ஆரம்பமானது, எம்மையும் எம் இனத்தின் மறுக்கப்பட்ட சுதந்திரத்தையும் எப்படி மீட்டெடுப்பது என்பதை இளைஞரிடம் கையளிக்கவேண்டும்.

இதுவே இன்றைய காலத்தின் தேவை. இதைச் செய்யாமல் சுயநல அரசியல் நடத்தினால் இது வெறும் சிலை எழுப்பும் அரசியலாயே முடியும்.


**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## வாகனத் திருத்தம் என்ற பேரில் பணத்தை உறிஞ்சும் கம்பனிகள்



வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய பிரதம குரு சிவத்திரு .விசாகரத்தின ஐயர் தெய்வேந்திர ஐயர் அவர்கள் தேகவியோகம் அடைந்து விட்டார்.எங்கள் வழிபடு கடவுளாகிய சந்நிதி முருகன் ஆலயத்தின் பூசை வழிபாடுகளை ஆகம விதிகளுக்கு அப்பால், சிறப்பாக நின்று ஆற்றியவர்.

அவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது.

சாத்திரியார் சதாசிவம் ஆலடியில் குடிநீர் நிரப்பிய மண் பானையையும் அதன் மூடிமேல் குவளை ஒன்றையும் வைத்தார்.

இதனை அவதானித்த மூப்பர், இந்தா கனடாவில இருந்து வந்தாலும் சாத்திரியார் எங்கட தாக சாந்திப் பண்பாட்டைக் கைவிட வில்லை.

**சாத்திரியார்:-** மூப்பர், முன்பு ஒரு போதும் இல்லாத அளவில சூரிய வெப்பம் மக்களை வாட்டுது. வீட்டு வாசல்கள் தோறும் குடிநீர் வைக்க வேணும்.

முன்பெல்லாம் எங்கட வீட்டு வாசலில் திண்ணை இருக்கும்.

அந்தத்திண்ணைகளில குடிநீர் வைக்கப்பட்டிருக்கும். வீதியால் போறவர்கள், வாறவர்கள் களைத்துப் போனால், அந்தத் திண்ணையில ஆற அமர இருந்து குடிநீர் பருகிக் களைப்பாறுவினம்.

ஆனால் இப்ப நிறுவனங்கள் கூட பொது மக்கள் தண்ணீர் குடிப்பதற்கான, வசதிகளைச் செய்யாமல் இருக்கினம்.

இதனால பொது மக்கள் தாகம் தீர்க்க முடியாமல் அந்தரிக்கினம்.

**விதானையார்:-** அதுசரி, முன்பு ஒரு போதும் இல்லாத அளவில சூரிய வெப்பம் அதிகரிப்பதற்கு என்ன காரணம்.

**சாத்திரியார்:-** சூரியனுக்குக் காய்ச்சல் போல....

இவ்வாறு சாத்திரியார் கூற, ஆலடியில் சிரிப்பொலி எழுந்தது.

என்ன சாத்திரியார் சூரியனுக்கும் காய்ச்சல் வருமோ. பண்டிதர் வினவினார்.

**சாத்திரியார்:-** பண்டிதர் ஐயா! சூரியனுக்கும் காய்ச்சல் வரும். எப்படி எங்களுக்கு உணவு நஞ்சாகுவதன் மூலம் காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் வருகுதோ அதுபோல சூரியனுக்கும் வரும்.

**சிறாப்பர்:-** அப்ப சூரியன் நஞ்சான உணவுகளை உண்டவரோ.

**சாத்திரியார்:-** அவர் உண்ணல்ல. நாங்கள் தான் உண்ண வச்சனாங்கள்.

**சிறாப்பர்:-** என்ன? சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:-** சிறாப்பர் அண்ணே!, தைப்பொங்கல் திருநாளில சூரியனுக்குப் பொங்கிப் படைகிறோம். அதில மருந்து தெளித்த வாழைப்பழம், மாம்பழம், சுடு தண்ணீரில போட்டு அவித்து சக்கடித்த விளாங்காய் பழுதாப்போன பாக்கு இவற்றோட கண்டபாட்டில யூரியாப் போட்டு விளைவித்த அரிசி, கெமிக்கலைப் பயன்படுத்தி வெள்ளையாக்கின சீனி என எல்லாமும் நஞ்சு தானே.

இந்த நஞ்சான உணவுப் பண்டங்களைச் சூரியனுக்குப் படைக்க அதனை உண்ட கதிரவன் கடும் காய்ச்சலுக்கு ஆளாகிவிட்டான்.அது தான் இந்த வெப்பம்.

இவ்வாறு சாத்திரியார் கூறியதும் ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:-** சாத்திரியார் நகைச்சுவையாகக் கூறினாலும் அதில உண்மை இருக்கத்தான் செய்யுது.

இனிமேலாவது எங்கட வீட்டு வளவில விளைந்த பழவகைகளை, எங்கட வயலில் விளைந்த அரிசியை, நாங்கள் வைத்து உண்டாக்கிய வெற்றிலை பாக்கை சூரியப் பொங்கலில படைப்பம்.

அந்தப் படையலை வலியுறுத்துவது போலத் தான் சூரியபகவான் வெப்பத்தை அள்ளிக் கொட்டுகிறார் என்று உணருவோம்.

இவ்வாறு வாத்தியார் கூறி முடிக்க, அந்நேரம் பார்த்து கங்காணி கார்த்திகேயன் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

**மூப்பர்:-** என்ன கங்காணி இண்டைக்கு லேட்டாப் போச்சுது என்ன சங்கதி.

**கங்காணி:-** அதை யேன் கேட்கிறியள். என்ர மகன் ஒரு பட்டா வாகனம் வாங்கினவன். அதுக்குப் பழுது வாற போதெல்லாம் யாழ்ப்பாணத்தில இருக்கிற கொம்பனியில கொண்டு போய்த் திருத்தம் செய்யிறது.

ஆனால் கொம்பனிக் காறர், ஒரு பிழையைத் திருத்திப் போட்டு ஏகப்பட்ட காசைக் கறப்பினம்.

பிறகு அடுத்த பிழைக்குக் கொண்டு போனால், அதைத் திருத்திப் போட்டு அதுக்கும் ஏகப்பட்ட காசு. இப்படி வாகனத்தை வித்துப் போட்டு அந்த வாகனம் உழைக்கிற அவ்வளவு பணத்தையும் கொம்பனியின் பேரில இயங்குகிற கராச் கறந்து போடுது.

இதற்கு அங்க வேலை செய்யிற் எங்கட ஆட்களும் காரணம் எண்டு சொல்லுகினம்.

**வாத்தியார்:-** உந்த அநியாயங்கள் எங்கட மண்ணில தாராளமாக நடக்குது.

வாடிக்கையாளர் சேவை எண்டு சொல்லுவினம். எங்க ஒருக்கா வாடிக்கையாளர் சேவைக்கு தொலைபேசியில முறைப்பாடு செய்து பாருங்கள். அந்தப் பக்கமும் திரும்பி பாராயினம்.

பொருளை விற்கும் வரைக்கும் ஆசாமாகக் கதைப்பினம். விற்று முடிந்தால் அவ்வளவு தான். அந்த வகையில ஒன்று தான் இந்த வாகனம் திருத்திற கம்பனிகளும் சனத்தின்ர உழைப்பை உறுஞ்சுகினம். அதிலும் வாகன உதிரிப் பாகங்களை மாற்றுவதாகக் கூறினால் அவ்வளவு தான். வீடு விற்றுத் தான் காசு கட்ட வேணும்.

**விதானையார்:-** ஏன் பாருங்க இது விடயங்களில எங்கட பாவனையாளர் பாதுகாப்புச் சபைகள் என்ன செய்யினம். சனங்களின்ர பொருளாதாரத்தை உறிஞ்சுகிற இந்த நிறுவனங்கள் தொடர்பில் அந்தச் சபைகள் நடவடிக்கை எடுத்தால் என்ன?

இவ்வாறு விதானையார் கருத்துரைக்க, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்த கோயிலுக்குச் சென்றனர்.


ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம்முறை மே தின கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி. இலங்கை மக்கள் மாற்றத்தை விரும்புவதை உணர்த்துகிறதா?



நான் என்று வாழும் மனிதனை நாய் கூடத் திரும்பிப் பார்க்காது என்கிறார்களே உண்மையா மாமா?

**மதுவன் — மீசாலை**

**கவுண்டமணி-செந்தில் இருவரும் யாழ்ப்பாணத்துக்கு வந்தால் மக்கள் நிலை எப்படி இருக்கும் வியாசரே?**

தேர்தல் காலம் நெருங்குகிறது.அதனால் அவர்கள் இங்கு வந்தால் அவர்களின் நகைச்சுவை எடுபடாது.

தேர்தல் கோமாளிகளின் நகைச்சுவையைப் பார்த்து மக்கள் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கும் வேளை கவுண்டமணி செந்தில் எல்லாம் பெரும் நகைச்சுவையாளர்கள் இல்லை.

தேர்தல் காலம் முடிந்த பின்னர் வேண்டுமென்றால் அவர்கள் வந்தால் அவர்களின் நகைச்சுவை எடுபட வாய்ப்புக்கள் உண்டு.

இங்குதான் ஒட்டுமொத்த தமிழினத்தின் அபிலாசைகளைத் தீர்க்கும் வீரரு, சூரரு எல்லாம் இருக்கின்றனரே.

**துஷிகரன் — வடமராட்சி**

**தொலைநோக்கு,அர்ப்பணிப்பு,தியாக மனப்பான்மை படைத்த ஒரு புதிய தலைமைத்துவம் தமிழினத்துக்குக் கிடைக்குமா?**

கிடைக்குமே.அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது. இன்று இரவுச் சாப்பாட்டை நேரத்துடன் எடுத்துக் கொள்ளுங்கள்.தரையை நன்கு கூட்டிவிட்டு பாயை விரியுங்கள்.

தலைக்கு ஒரு தலையணை. காலுக்கு ஒரு தலையணை வைத்துக் கொள்ளுங்கள்.

ஒரு டம்ளர் பாலை மடக்கு மடக்கு எனக் குடித்துவிட்டு எமக்கு "ஒரு நல்ல தலைவன் வர வேண்டும்" இந்த வசனத்தை ஆள்மனதில் பதியக் கூடியவாறு திரும்பத் திரும்ப உச்சரிக்கவும்.

அவ்வாறு நீங்கள் திரும்பத் திரும்ப உச்சரிக்கும் போது உங்களை அறியாமலேயே நீங்கள் நித்திரைக்குச் சென்று விடுவீர்கள்.

அன்று இரவு நிச்சயம் உங்களின் வேண்டுகோள்களின் மொத்த உருவமான தலைவர் உங்கள் கனவில் வருவார். முயற்சி செய்து பலன் பெறவும்.

**இந்திரஜித் — வவுனியா**

**வாழ்க்கையின் தத்துவத்தை விபரிக்க முடியுமா வியாசர் மாமாவே?**

இறந்தவரின் உடலை எரியூட்டுவதற்காக மயானத்தில் பலர் கூடி இருக்கிறார்கள்.

நன்றாக வாழ்ந்த மனிதன்.எரியூட்டுவதற்கு முன் அவர் அணிந்திருந்த நகைகள் எல்லாம் கழையப்படுகிறது.

சிதை மூட்டப்படுகிறது. கண்ணிமைக்கும் நேரத்தில் தீ அவர் உடலை சாம்பலாக்க கொழுந்து விட்டெரிகிறது.

இதுதான் மனித வாழ்க்கை எதைக் கொண்டு வந்தோம்.எதைக் கொண்டு செல்லப் போகிறோம் என அங்கிருந்தவர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

திடீரென அங்கு கருமேகம் கூடி மழை பொழியத் தொடங்குகிறது.நின்றவர்கள் அனைவரும் தமது தொலைபேசி நனைந்துவிடும் என்று அதை எடுத்து பத்திரப்படுத்தியபடி மறைவிடத்திற்கு ஓடிச் செல்கிறார்கள்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சிறிதர் — மானிப்பாய்**

**நான் என்று வாழும் மனிதனை நாய் கூடத் திரும்பிப் பார்க்காது என்கிறார்களே உண்மையா மாமா?**

நான் என்ற ஆணவம் சூரபத்மனை ஆட்டிப்படைக்கிறது.

அவனை அழிக்க முருகன் தோன்றுகிறான். சூரனுடன் போர் புரிகிறான்.

போரின் உச்ச கட்டம். அப்போது யாரும் கண்டிராத தனது திருப்பெரும் வடிவத்தை சூரனுக்குக் காட்டுகிறான் முருகன்.

ஒரு நொடி மனமுருகி கை கூப்பிய சூரனின் நான் என்ற ஆணவம் கும்பிட்ட கையை இறக்குகிறது.

முருகன் மீது மீண்டும் போர் தொடுக்கிறான்.

இதன்பின்பும் சூரனை விட்டு வைக்கக் கூடாது என முடிவெடுத்த முருகன். வேலெடுத்த சூரனை வதம் செய்து தேவருக்கு நிம்மதியான வாழ்வைக் கொடுக்கிறான்.

நான் என்று ஆடிய எவனும் நின்றதும் இல்லை. நிலைத்ததும் இல்லை. இதுவே தத்துவம்.

**இளங்கோ — மானிப்பாய்**

**இனவெறிக்கு எதிராக குரல் எழுப்பும் நாம் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக பேசக் கூடாது என்பது நியாயமா?**

இப்போது நாம் எந்த இடத்தில் நிற்கின்றோம் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இதைவிட்டுவிட்டு நாம் எமது சிந்தனையை வேறு பக்கம் திருப்புவோமாக இருந்தால் அது ஒட்டு மொத்த தமிழினத்தையும் பாதிக்கும்.

எமக்கு இப்போது தேவை சுதந்திரமான வாழ்க்கை.அதுவும் எமது தேசத்தில்.

இதைத்தான் எமது இலக்காகக் கொண்டு பயணிக்க வேண்டும்.

இதைவிடுத்து இவ்வாறு சிறுபிள்ளைத்தனமான சிந்தனைகளை விதைத்தால் மீண்டும் ஆரம்பத்தில் இருந்து வர வேண்டி இருக்கும்.

தயவு செய்து இத்துடன் இவ்வாறான சிந்தனையை கைவிட்டு விடுங்கள் பிளீஸ்.

**விஜயதரன் — உரும்பிராய்**

**இம்முறை மே தின கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி. இலங்கை மக்கள் மாற்றத்தை விரும்புவதை உணர்த்துகிறதா?**

எங்கள் நாட்டு மக்களைப் பற்றித் தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

வாக்களிப்பதற்கு ஐந்து நிமிடம் இருக்கும் போதே தமது முடிவை மாற்றக் கூடிய வல்லமை படைத்தவர்கள் எமது மக்கள்.

அதிலும் தேர்தலுக்கு முந்தய நாள் மீண்டும் விடுதலைப் புலிகள் உருவாகிறார்கள்.

நாட்டை அழிக்கப் போகிறார்கள், உளவுத்துறை தகவல் என்ற செய்திகளைப் பரப்பி விடுவார்கள்.

அதன்பின் யார் வெல்லுவார் என்று உங்களுக்குத் தெரியும் தானே.

ஆதலால் கூட்டத்திற்கு சேரும் மக்களை வைத்துக் கொண்டு நாம் ஒரு பொது முடிவுக்கு வரமுடியாது தம்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: புவனா ஒரு கேள்விக்குறி
பாடியவர்: எஸ்.பி.பாலசுப்ரமணியம்
இயற்றியவர்: பஞ்சு அருணாசலம்
இசை: இளையராஜா



ராஜா என்பார் மந்திரி என்பார்
ராஜ்ஜியம் இல்லை ஆள
ஒரு ராணியும் இல்லை வாழ
ஒரு உறவுமில்லை அதில் பிரிவுமில்லை
அந்தரத்தில் ஊஞ்சல் ஆடுகிறேன் நாளும்

ராஜா என்பார் மந்திரி என்பார்
ராஜ்ஜியம் இல்லை ஆள....

கல்லுக்குள் ஈரமில்லை
நெஞ்சுக்குள் இரக்கமில்லை
ஆசைக்கும் வெட்கமில்லை
அனுபவிக்க யோகமில்லை

பைத்தியம் தீர வைத்தியம் இல்லை
உலகில் எனக்கு ஒரு வழியில்லை

ராஜா என்பார் மந்திரி என்பார்
ராஜ்ஜியம் இல்லை ஆள...

நிலவுக்கும் வானமுண்டு
மலருக்கும் வாசமுண்டு
கொடிக்கொரு கிளையுமுண்டு
எனக்கென்று என்னவுண்டு

ஏன் படைத்தானோ இறைவனும் என்னை
மனதில் எனக்கு நிம்மதி இல்லை

ராஜா என்பேன் மந்திரி என்பேன்
ராஜ்ஜியம் உனக்கு உண்டு
ஒரு ராஜகுமாரன் உண்டு
ஒரு உறவுமுண்டு அதில் பரிவுமுண்டு
அந்தரத்தில் ஊஞ்சல் ஆடுவதேன் நாளும்

தெய்வத்தில் உன்னைக் கண்டேன்
தினம்தினம் பூஜைசெய்தேன்
நிலவுக்குக் களங்கமென்று
உறவுக்குள் விலகி நின்றேன்

மயக்கமும் ஏனோ கலக்கமும் ஏனோ
உலகில் உனக்கு சரித்திரம் உண்டு

ராஜா என்பார் மந்திரி என்பார்
ராஜ்ஜியம் இல்லை ஆள
ஒரு ராணியும் இல்லை வாழ
ஒரு உறவுமில்லை அதில் பிரிவுமில்லை
அந்தரத்தில் ஊஞ்சல் ஆடுகிறேன் நாளும்

# துரியோதனின் தம்பிக்காக கதறி அழுத பீமன்

**“மகாபாரதத்தின் கதாபாத்திரங்கள் பற்றிப் பேசும்போது, நாமே ஒரு முன்முடிவுக்கு வந்து விடுவோம். பாண்டவர்கள் நல்லவர்கள் கௌரவர்கள் கெட்டவர்கள் என்று! ஆனால் கௌரவர்கள் நூறுபேரில் ஒருவர்கூடவா நல்லவர் இல்லை? என்று எப்போதாவது யோசித்திருக்கிறோமா? கௌரவ சகோதரர்களிலும் இருவர் மிக உத்தமர்களாக இருந்தார்கள். அவர்களின் வாழ்வு, அனைவருக்குமான பாடம்.**

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் சூதாட்டம் நடந்தது. தருமன் தோற்றுப் போனான். இனிபணயம் வைக்க ஏதுமில்லை என்கிற நிலையில், மனைவி திரௌபதியைப் பணயம் வைக்குமாறு சகுனி கூறினான். தருமனும் அப்படியே செய்து ஆட, மறுபடியும் தோற்றுப்போனான்.

“சூதாட்டத்தில் இதைப் பணயம் வை” என்று எதிராளி சொல்லக் கூடாது என்பது விதி. ஆனால், சகுனி சொல்லித்தான் தருமன் தன் மனைவியைப் பணயமாக வைத்தான். அதனால் அவள் பணயப் பொருள் அல்ல, அது தர்மமும் அல்ல!” என்று அந்தச் சபையிலேயே அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கண்டித்தான் ஒருவன்.

பிதாமகர் பீஷ்மரும், துரோணரும் கூட தட்டிக் கேட்க இயலாமல் தவித்துக்கொண்டிருந்த அந்த சபையில் இப்படித் துணிச்சலுடன் கேட்டவன் விகர்ணன். துரியோதனனின் தம்பி அவன். தன் சகோதரர்களுக்கு எதிராகவே, தயக்கமின்றித் துணிச்சலுடன் குரல் கொடுத்தான் என்றால், விகர்ணன் எத்தகைய பண்பாளனாக இருந்திருப்பான்?

ஆனால், அதர்மம் நிறைந்த அந்தச் சபையில் அவன் பேச்சு எடுபடவில்லை. ‘கோடாலிக் காம்பு’ என்று கேலி செய்யப்பட்டான். அப்போதும் “நீங்கள் எல்லோரும் நரகத்துக்குத்தான் செல்வீர்கள்” என்று சொல்லி அமர்ந்தான் விகர்ணன்.

மகாபாரதப் போரில் துரியோதனனின் சகோதரர்களில் எட்டுப் பேரை பீமன் ஒரே நேரத்தில் அடித்துக் கொன்றான். அந்த எட்டுப் பேரில் விகர்ணனும் ஒருவன். அப்போது, ‘விதி வசத்தால், உத்தமனான உன்னையும் நான் கொல்ல நேர்ந்ததே’ என்று கதறி அழுதானாம் பீமன். அந்த அளவுக்கு உத்தமன் விகர்ணன்.



விகர்ணனைப் போலவே துரியோதனனின் தம்பியான யுயுத்ஸு என்பவனும் நற்குணங்கள் நிறைந்தவனாக இருந்தான். ஒவ்வொரு முறையும் தன் அண்ணன்மார்களின் அடாத செயல்களைக் கண்டு வெட்கித் தலை குனிந்து நின்றவன் அவன். போர்க்களத்தில் அபிமன்யு கொல்லப்பட்ட விதம் அநியாயமானது, அதர்மமானது என்று சொல்லி, போர்க்களத்திலிருந்தே வெளியேறியவன் இந்த யுயுத்ஸு.

ஆக, எவரோ சொல்வதைக் கேட்டும் உருவத்தை வைத்தும் இவர் இப்படித்தான்’ என்று எவரையும் தவறாகக் கணித்துவிடக் கூடாது. நம்முடைய பொதுப்புத்தியில் படிந்திருக்கும் சில எண்ணப்படிமங்களை வைத்து, சட்டென்று எந்தவொரு முன் முடிவுக்கும் வரக்கூடாது என்பதற்காகவே இந்த உதாரணங்கள். அதேபோல், தவறான ஆசாமிகளையும் சரியானவராகக் கருதிப் பக்கத்தில் வைத்துக் கொள்ளக் கூடாது.

வேங்கை நாட்டு மன்னரிடம் அப்படியொருவர் அமைச்சராக இருந்தார். ஒருநாள் மன்னர் அவரை அழைத்து “நமது நாட்டினரில் வடிகட்டிய முட்டாள் யார்?” என்று கேட்டார்.

“வெகு சீக்கிரம் அப்படி ஒருவனைக் கண்டு பிடித்து அழைத்து வருகிறேன் மன்னா!” என்ற அமைச்சர், முட்டாள் மனிதனைத் தேடிச் சென்றார். நாடெங்கும் தேடியும் அப்படி ஒருவன் கிடைக்கவில்லை. வருடங்கள் உருண்டோடின. இந்த நிலையில், வயதான அந்த மன்னர், மரணப் படுக்கையில் வீழ்ந்தார்.

விடயமறிந்து அரண்மனைக்கு விரைந்தார் மந்திரி. படுக்கையில் இருந்த மன்னர் அமைச்சரைக் கண்டதும், “என்ன மந்திரியாரே, முட்டாளைக் கண்டுபிடித்து விட்டீரா?” என்று கேட்டார்.

“இல்லை மன்னா!” என்று கூறித் தலை கவிழ்ந்தார் அமைச்சர். உடனே மன்னர், “நான் கண்டு பிடித்து விட்டேன். ஒன்றல்ல, இரண்டு வடிகட்டிய முட்டாள்கள் உண்டு” என்றவர் தொடர்ந்து பேசினார்.

“ஒன்றுக்கும் உதவாத ஒரு விடயம் குறித்து உம்மிடம் கேட்டேன். ‘அது அவசியம் இல்லாதது’ என்று ஒதுக்கித் தள்ளாமல் முட்டாளைத் தேடிப் போகிறேன் என்று எவ்வளவு காலத்தை வீணாக்கிவிட்டீர்? ஆக, நீர் ஒரு முட்டாள்.

இப்படி ஒரு ஆசாமியை மந்திரியாக நியமித்தேனே... நானும் ஒரு வடி கட்டிய முட்டாள்!’ என்று சொல்லி உயிரை விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசா! தொடரும் துயரம்

'காசாவில் மட்டுமே நீங்கள் உறங்கச் சென்றால் திரும்பி எப்படி எழுவீர்கள் என்பதைக் கணிக்க முடியாது உங்களை எழுப்பும் சத்தம் செவிப்பறையை அதிர வைக்கும் பெரும் குண்டு வெடிப்பின் சத்தமாக இருக்கலாம். அல்லது தன் தாய் தந்தை என அனைத்தையும் இழந்து அநாதையாக மாற்றப்பட்டபச்சிளம் குழந்தையின் ஓலமாக இருக்கலாம்.

அல்லது ஒரு வீதியே கதறியழும் புதிய புனித தியாகிகளின் இறுதி அஞ்சலியாக இருக்கலாம். இன்னும் மோசமாக யோசித்தால் மறுநாள் நீங்கள் எழுந்திருக்காமல்கூட இறந்து போகலாம்.

ஆம், காசாவில் மட்டுமே நீங்கள் உறக்கத்தில் நட்சத்திரங்களை எண்ணுவதற்குப் பதிலாக ரொக்கெட்களை எண்ணிக்கொண்டிருப்பீர்கள்!

நீங்கள் ஒருவேளை உயிரோடு எழுந்துவிட்டால் அது கிரீச்சிடும் பறவைகளின் சத்தத்தில் இருக்காது மாறாக எங்கிருந்தோ விழுகிற வெடிகுண்டின் பேரபாயமாக இருக்கும்!

ஆம், காசாவில் மட்டுமே கண்ணிமைக்கும் நேரத்தில் உங்கள் வாழ்க்கை மாறும். கண்ணிமைக்கும் நேரத்தில் உங்கள் மரணம் நெருங்கும் கண்ணிமைக்கும் நேரத்தில் நீங்கள் தியாகி ஆகிவிடுவீர்கள். இறுதியில் மரண எண்ணிக்கையில் வெறும் எண்களாக மாறிப்போவீர்கள்! கடந்த 200 நாள்களாக காசாவில் தனது உயிரைப் பணயம் வைத்து செய்தி சேகரித்துக்கொண்டிருக்கும் அவுஸ்திரேலியப் பத்திரிகையாளரான பிளஸ்டியா அல்கத் என்பவரின் போர்த் துயர்க் கவிதை இது. தற்போதைய காசாவின் நிலையை உணர்த்தும் படைப்பாக இதனைச் சொல்லலாம்.

பாலஸ்தீன மண்ணின் பூர்வகுடிகளான இஸ்லாமிய மக்களின் நிலத்தை ஆக்கிரமித்ததோடு, உலக வல்லாதிக்க நாடுகளின் துணைகொண்டு தொடர்ந்து பல வன்முறையை நிகழ்த்திவருகிறது இஸ்ரேல் அரசு. இதற்கு எதிராகப் பல ஆண்டுகளாகப் பாலஸ்தீனம் போராடி வரும் நிலையில், கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி பாலஸ்தீனத்தின் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர். அதனைத் தொடர்ந்து ஹமாஸ் அமைப்பை வேரறுப்பதாகச் சொல்லி காசாவில் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தி வருகிறது இஸ்ரேல். 200 நாட்களைத் தாண்டித் தொடரும் இந்தக் கோரத் தாண்டவத்தின் மரண எண்ணிக்கை நம் நெஞ்சை உறைய வைக்கிறது!

இஸ்ரேலின் தாக்குதல்களில் குறைந்தது 34,183 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்கிறது காசா சுகாதார மையம். அதில் 72 சதவிகிதம் பேர் பெண்களும் குழந்தகளும். 70,000 இற்கும் மேற்பட்டோர் மோச மாகக் காயமடைந்துள்ளார்கள். "அவர் கள் ஹமாஸ் பெயரைச் சொல்கிறார்கள். ஹமாஸை வேட்டையாட நினைக்கிறார்கள், வானிலிருந்து குண்டுகள் பொழியும் போதும் அவர்கள் மீண்டும் அதே பெயரைச் சொல்கிறார்கள். ஆனால் அந்த குண்டுகளுக்கு ஹமாஸ் வீரர் யார்? சாதாரண மக்கள் யாரென்று தெரிவது கிடையாது. இது இழப்பதற்கு ஏதுமில்லாத நிலையில் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நாளும் குழந்தைகளைச் சுமந்தபடி பாதுகாப்பான இடம்தேடிப் புலம்பெயர்ந்து கொண்டிருக் கும் காசா மக்களின் அழுகுரல்.

இப்படி மக்கள் வேகமாக இடம் பெயர்ந்து கொண்டிருக்க, கான் யூனிஸ் பகுதியைச் சேர்ந்த ஒரு பெண் தன் இடத்தை விட்டு நகராமல் வெள்ளைத் துணியால் சுற்றி வைக்கப்பட்ட 5 வயதுப் பெண் குழந்தையை அணைத்தபடி அழுது கொண்டு இருக்கிறார். இந்தக் காட்சியைப் பதிவு செய்த முகம்மது ஸலாம், "இஸ்ரேலின் வான்வெளித் தாக்குதலில் காசாவின் குடியிருப்புகள் நொறுங் கிவிட்டன. அதில் தனது தாய், சகோதரி, சகோதரியின் மகளான சல்லி எனும் ஐந்து வயதுக் குழந்தை என எல்லோ ரும் இறந்துபோக, அந்தக் குழந்தை யைப் பிரிந்து போக மனமில்லாமல் அடுத்த குண்டுவீச்சை எதிர்கொள்ளக் காத்திருக்கிறாள் சித்தி" என்கிறார். சர்வதேச வெர்ட் பிரஸ் விருது பெற்ற அந்தப் புகைப்படம் எவரையும் கலங்க வைத்துவிடும்.



ஐ.நா மனித உரிமைகள் ஆணையத் தலைவர் வோல்கர் டர்க், "காசாவில் ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கும் ஒரு குழந்தை கொல்லப்படுகிறது" என்ற அதிர்ச்சி உண்மையைச் சொல்கிறார். பல பெற்றோர்கள் அடையாள அட்டை எண்களைக் குழந்தைகளின் கைகளில் எழுதி வைக்கிறார்கள். ஒவ்வொரு தாக்குதலிலும் அடையாளம் காண முடியாத அளவுக்குச் சிதைகிற உடல்களுக்குள் தங்கள் குழந்தையை அடையாளம் காணவே அதைச் செய்கிறார்கள் என்பது மனச்சாட்சியை உலுக்குகிறது.

உலகப் போர்க் குற்றங்களை ஆவணப்படுத்தி வரும் 'ஏர் வார்ஸ்' இயக்குநர் எமிலி ட்ரிப், "கடந்த 200 நாட்களில் முன்னெப்போதும் இல்லாத அளவில் மரணங்களைக் கண்டிருக்கிறோம். ஒரு ஆயுதக் குழுவினரின் மீது நடக்கும் தாக்குதலாக இது தெரியவில்லை. பெண்களும் குழந்தைகளுமே இதில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்" என்கிறார். ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் பிரான்செஸ்கா அல்பனீஸ், "ஐ.நா இனப்படுகொலை மாநாட்டின் கீழ் போர்க் குற்றமாகப் பட்டியலிடப்பட்ட ஐந்து செயல்களில் மூன்றை இஸ்ரேல் மீறியதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன" என்கிறார்.

இதுவரையில் 75,000 டொன் வெடிபொருள்கள் காசாமீது வீசப்பட்டுள்ளன. UNRWA (ஐ.நா நிவாரணம் மற்றும் பணிகள் நிறுவனம்) "இஸ்ரேலின் தாக்குதலில் காசாவில் சுமார் 90,000 வீடுகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளன. 3 லட்சம் வீடுகள் சேதமாகியுள்ளன" என்று புள்ளிவிவரம் வெளியிட்டிருக்கிறது. ஒவ்வொரு தாக்குதலுக்குப் பிறகும் இடிபாடுகளில் தங்கள் காதுகளை வைத்து ஏதாவது சத்தம் வருகிறதா, யாராவ்து உயிரோடு இருக்கிறார்களா என்று தேடும் காணொலிகள் நெஞ்சை அறுக்கின்றன. அப்படி 7,000 நபர்கள் தேடப்பட்டுவருகிறார்கள்.

இடிபாடுகளில் சிக்கியவர்கள் உயிரோடு இருந்தாலும் அவர்களைக் காப்பாற்ற மருத்துவமனைகள் இல்லாத சூழல். போர் தொடங்கிய காலத்திலிருந்து இதுவரை 26 மருத்துவமனைகள் அழிக்கப்பட்டு, நூற்றுக்கணக்கான மருத்துவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். உலக சுகாதார அமைப்பு, 'காஸாவின் 36 மருத்துவமனைகளில் வெறும் 10 மட்டுமே குறைந்தபட்சமாகச் செயற்படுகின்றன' என்கிறது. மருத்துவமனைகளை முற்றுகையிடும் இஸ்ரேல் வீரர்கள் அங்கிருந்து சென்ற பிறகு, அவற்றில் பிணக்குவியல்களே மிஞ்சுகின்றன. காசாவின் கான் யூனிஸ் நகரில் உள்ள நாசர் மருத்துவ வளாகத்திற்குள் கிடத்தப்பட்ட 300 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. பல வாரங்களாக இஸ்ரேலில் படைகளால் முற்றுகையிடப்பட்ட காசா நகரத்தின் அல்-ஷிஃபா மருத்துவமனையிலும் இதே நிலைதான்.

உலக வங்கியும் ஐ.நாவும் சேர்ந்து ஏப்ரல் 2ஆம் திகதி வெளியிட்ட விசாரணை அறிக்கையில் 'போரில் காசா நகரத்தின் உட்கட்டமைப்புகள் அடைந்த சேதம் மட்டுமே இந்திய மதிப்பில் ஒன் றரை லட்சம் கோடி. 11 லட்சம் மக்கள் உணவுப் பற்றாக் குறையால் அவதிப்ப டுகின்றனர். ஏற்கெனவே பட்டினிக் கொடுமையைத் தாங்க முடியாமல் சுமார் 30 குழந்தைகள் இறந்துள்ளன.

இந்த அனைத்தையும் காரணம் காட்டி, போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்து ஐ.நா. நிறைவேற்றிய நான்கு தீர்மானங்கள் இஸ்ரேலின் நட்பு நாடு களால் தடுக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா தொடர்ந்து ஐ.நாவில் இஸ்ரேலுக்கு ஆதரவளித்து, ஆயுதங்களையும் வழங்கி வருகிறது. கடந்த வார இறுதியில் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை, இஸ் ரேலுக்கு 26 பில்லியன் டொலர் உதவியைச் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

பாலஸ்தீனப் பிரதமர் மஹ்மூத் அப் பாஸ், "அமெரிக்கா நினைத்தால் அதன் நெருங்கிய கூட்டாளியான இஸ்ரேலின் தாக்குதலை நிறுத்தி வைக்க முடியும்" என்று வேண்டுகோள் விடுத்திருக் கிறார். அதே நிலையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) விரைவில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் அந்த நாட்டின் முக்கியமான ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகளைப் போர்க்குற்ற வாளிகளாக அறிவித்து கைது வார ண்ட் பிறப்பிக்க இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இஸ்ரேல் பிரதமரோ "ஐ.சி.சி எந்த முடிவு எடுத்தாலும் நாங்கள் கண்டு கொள்ளப் போவது கிடையாது" என்று திமிராக பதிலளித்திருக்கிறார். அமெரிக்காவும், "ஐ.சி.சி இற்கு இதில் தலையிட எந்த அதிகாரமும் இல்லை" என்று இஸ்ரேலுக்கு முட்டுக்கொடுக்கிறது.

இங்கிலாந்தைச் சேர்ந்த சர்வதேச சட்ட விரிவுரையாளர் மேத்யூ கில்லட், "இந்த வாரண்ட் நடைமுறைக்கு வந்தால் ஐ.சி.சி உறுபினர்களாக உள்ள 120இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இஸ்ரேல் அரசு அதிகாரிகள் செல்ல முடியாது. அதே போல அவர்களின் நட்பு நாடுகளுடன் ஆயுதப் பரிமாற்றங்கள் செய்யவும் கடுமையான நெருக்கடிகள் இருக்கும்" என்றிருக்கிறார்.


இங்கே போரை ஆரம்பித்தது ஹமாஸ் ஆயுதக் குழுவினர்தான். அவர்கள் இஸ்ரேல் வீரர்களைப் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கிறார்கள் என்று ஒருபுறம் வாதமிருக்க, சர்வதேச நீதிமன்றம் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கம் என்பது சொல்லப்படுகிறது.

எது எப்படி இருந்தாலும், காசாவில் ஒரு பாவமும் அறியாத குழந்தைகளும் பெண்களும் சாகடிக்கப்படுவது எவ்வகையிலும் குற்றமே. மனிதநேயம் மிக்க அனைத்து மனிதர்களும் கண்டிக்க வேண்டிய போர் இது. பாலஸ்தீன மக்கள் இப்போது தங்கள் வாழ்வை இரத்தத்தில் பதிவு செய்துவருகிறார்கள்.

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## மனிதனுக்கு ஒரு மடல்


மண் மீது கொண்ட காதலால் கருமேகம் உருவாக வழி செய்கிறேன்
மனிதா உன் மீது கொண்ட காதலால் ஒளித்தொகுப்புக்கு உதவி செய்கிறேன்
இரவில் நீ ஒளி பெறவே சந்திரனை ஒளிரச் செய்கிறேன்
இருந்தும் என் மீது நீ ஏன் அதீத கோபம் கொள்கிறாய்
தைப்பொங்கல் தினத்தில் எனக்கு நன்றி சொல்கிறாய்
பங்குனி பிறந்ததும் என்னைத் திட்டித் தீர்க்கிறாய்
அக்கினிப் பிரவேசம் என்று அளந்து விடுகிறாய்
உன் மீது நான் ஒருதலைக் காதல் செய்ததே தவறேன்று உணர செய்கிறாய்

மனிதா! என்னை காதலித்தால் நீ மரத்தை நட்டிருப்பாய்
மரங்களை வெட்டும் போதும் ஒரு கணம் சிந்தித்து இருப்பாய்
மதில்கள் கட்டாது வேலிகள் போட்டிருப்பாய்
வீட்டு முற்றத்தில் சீமெந்து தரை இழுக்காது வாழ்ந்திருப்பாய்
புகைமிகு வாகனங்களை ஓடாது நீ விட்டிருப்பாய்
பொலித்தீன் பிளாஸ்டிக் என்று அத்தனையும் விட்டிருப்பாய்
குளிரூட்டியும் மின்விசிறியும் காற்றுச்சீரமைப்பி (ஏசி)களும்
வேண்டாம் என்றே இருந்திடுவாய்

தவறு முழுதும் நீ செய்தாய் பழி முழுதும் என்னில் சுமத்திவிட்டாய்
நான் என் செய்வேன் மனித புத்தி இப்படி தான் என்றெண்ணி
உன்னை மன்னித்து மீண்டும் மழை பொழிய செய்திடுவேன்
உண்மைக் காதல் எது என்று நீ புரியும் போது
என் சகோதரி பூமியும் உயிரோடு இருக்கமாட்டாள்
நீயும் மடிந்து போய்விடவே என் உண்மை காதலும் அழிந்து போகிடுமே
உன் மாற்றத்தை நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கிறேன்

**அன்புடன் சூரியன்,**
**அரியாலையூர் யசிதீபன்.**

## பிரிவின் வலி



கார்மேகம் ஓடுதே - எங்கோ
கதை பேசப் போகுதே
விண்மேகம் தன்னிலே - பனி
கண்ணீராய் சிந்துதே!
மின்னாத மேகமாய்-உன்
மௌனங்கள் கொல்லுதே!
கொலுசொலியும் பேசுமா-அது
உயிர் ஆழம் வரை கொல்லுமா?
பிரிவின் வலி நீளுமா-அது
பிரிவினிலே முடியுமா!
தனிமையே வாழ்வாகுமா - தினம்
தவிப்பின் அலை நீளுமா
என் ஓரம் வந்துவிடு - நீ
ஓடாதே தொலைதூரம்

**இந்திரப்புத்திரன்**

## மௌனத்தின் தேடல்-715



### தட்டே சொத்து

மாட மாளிகை வீடு அன்று
பாலும் பழமும் உணவு
காணி வயல் கிணறு
ஆடு மாடு பண்ணையென
அத்தனையும் இழந்து இன்று
சோற்றுத் தட்டே சொத்தானது

**பி.மதுஷ்சன்,**
**தையிட்டி.**

### பசி பொறுக்குமா?

குறுகிய பிரதேசம் அது
முள்ளிவாய்க்கால்
இலட்சக்கணக்கான மக்கள்
போக்கிடம் இன்றித் தவிக்கிறோம்
செல்மழை கொத்துக் குண்டுகள்
கொன்று குவிக்கின்றன
எங்கும் மரண ஓலம்
பசி பொறுக்குமா?
கஞ்சிக்காகக் காத்திருக்கின்றோம்

**பிரமன், கொக்குவில்.**

### கேள்வியும் வேள்வியும்

ஆதிக்க ஆசையும் ஆயுதக் குவிப்பும்
மனித நேயத்தைத் துறக்கச் செய்வதால்
இயற்கை அனர்த்தங்களைக் காட்டிலும்
செயற்கையான செயல்கள்
அவலத்தைக் கூட்டும்
அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டலிலும்
ஆங்கோர் ஏழையின் கல்விக்கு உதவல்
மகாபாரதியின் பார்வையில் உயர்ந்தது
மகாபசியிதைக் கேள்விக் குறியாக்கும்

**க.நாகராசா, நுணாவில்.**

### உயிர் உள்ளவரை மறவாதே

உப்பிட்டவரை உள்ளளவும் நினை
உனக்கு உணவிட்டவரை
உயிர் உள்ளவரை நினை
வயிற்றுப் பசிப்பிணி போக்கி
உயிர் வாழ வழி செய்தாரை
மறவாதே உயிர் உள்ளவரை
மறவாதே!

**கோ.கோபிகாயினி**

### பசி

கண்டதே காட்சி கொண்டதே கோலமென புதுப்புது
களியாட்டங்கள் நடக்கும் இக் காலத்தில் பஞ்சம் தலை
விரித்தாடும் இக்கால கட்டத்தின் தேவையறிந்து சின்னஞ்
சிறார்களுக்கு உணவளித்து பசியாற்றி மகிழும் உன்னதமான
தன்னலமற்ற சேவை வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

**சி.மகாலட்சுமி,**
**கொக்குவில்.**

### ஜீவகாருண்யம்

உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே என்றனர் சான்றோர்
பசியென்று வந்தோருக்கு
பணமின்றி உணவளிக்கும் உத்தமரே
கற்பதரு, காமதேனுவைப் போல நீயும்
காருண்யம் செய்வதன் வல்லமையை வாழ்த்துகின்றேன்
உண்ண உணவு கிடைத்தவுடன்
உள்ளம் பூரிக்கும் சிறார்களின் முகத்தைப் பார்
ஜீவகாருண்யத்தில் கலங்கரை விளக்காய்
ஒளிர்ந்து திற்கும் உன் புகழ் ஓங்கட்டும்

**ஆ.செல்வி, திருநாவலூர்.**

## மௌனத்தின் தேடல்- 716



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை

அவ்வாறு வந்த படை பச்சிலைப்பள்ளியில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றினைத் தரைமட்டமாக்கியதோடு, அங்கிருந்த இரு குருமாரையும் கொலை செய்தது.

யாழ்ப்பாணத்தை நோக்கி வருகின்ற வழியிலுள்ள சில கிறிஸ்தவ தேவாலயங்களை எரியூட்டியழித்ததோடு, யாழ்ப்பாணக் கோட்டையையும் முற்றுகையிட்டது.

கப்பித்தான் மேஜர் லாங்றொட் தே செயிக்லாஸ் காபிறேரா கோட்டைக்குள்ளிருந்த பண்ட வலிமை காணததெனக் கண்டு எதிர்த்துத் தாக்காது இருந்தான். கண்டியரசனின் படை யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட செய்தியை அறிந்துகொண்ட போத்துக்கேயத் தேசாதிபதி கொன் ஸாந்தினோ தே சா உடனடியாக லாஸ்கொறின்ஸ்களும் பறங்கிகளும் கொண்ட படையொன்றினை கடல் வழியாக தொமிங்கோ கர்வல்லோ சாவ் என்பவனின் தலைமையில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தான்.

கண்டி மன்னனின் படை யாழ்ப்பாணக்கோட்டையை முற்றுகையிட்டு இருந்தது. அவர்களால் கோட்டையை நெருங்க முடியவில்லை பீரங்கிக்குண்டுகளும், துவக்குச் சன்னங்களும் எட்டாத தூரத்தில் முற்றுகைப் படை முகாமிட்டிருந்தது.

போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக்கோட்டையின் பலத்தையும், பாதுகாப்பையும் அந்தத் தொடர்ந்த முற்றுகை நிரூபித்தது. முற்றுகையின் 13 ஆம் நாள் கோட்டையின் தென்பக்கத்தில் கொழும்பிலிருந்து வந்த போர்த்துக்கேயப் படையணி இறங்கியது.

எதிர்பாராத படையிறக்கம் இவ்வளவு விரைவில் தேசாவின் படைப்பாதுகாப்புக் கொடுக்க வரமுடியுமா? வந்திருந்தன.



09 செங்கை ஆழியான்

கண்டிமன்னனின் சிங்களப்படை தொமிங்கோ கர்வல்லோசாவின் படையினால் நிர்மூலமாக்கப்பட்டன. அத்தப் பத்து முதலியார் பயங்கரமாகக் கொல்லப்பட்டார். சிறைப்பட்டோர் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டனர், பலர் அடிமைகளாக விற்கப்பட்டனர்.

போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை எதுவுமே நுழையாதது போல நிமிர்ந்து நின்றது. கடல் அலைகள் அதன் தென் அரண்சுவரில் கலத்துறையின் அடியை வருடின.

1657 ஆம் ஆண்டு மார்கழி -17

யாழ்ப்பாணக்கோட்டைக்கு 32 வயதாகின்றது. அதனை யாழ்ப்பாண மக்கள் "இராசவாசல்" என்று அழைத்தனர். (தொடரும்...)

---




காலத்தின் பதிவு 107

# கடல் புறா

## வணங்காத தலை! இணங்காத குரல்!

அதுவரை கூட்டத்தைப் பற்றி நின்ற பிரமை மெல்ல மெல்ல விலகியது. அவ்வளவு பெரும் செல்வத்தை இளையபல்லவன் என்ன செய்ய உத்தேசிக்கிறான் என்பதில் எண்ணம் போகவே கூட்டத்திலிருந்தவர்கள் கசமுசவென்று ஏதோ பேசத் துவங்கினார்கள்.

குளத்தில் சிறு கல் வீசப்பட்டதும் மெல்லத் துவங்கும் ஓர் அலை பல அலைகளைக் கிளப்பிவிடுவது போல் சலசலப்பு அதிகமாகக் கூட்டத்தில் ஏற்படத்தொடங்கியதன்றிச் சில விநாடிகளில் கேள்விகளும் சற்று பலமாகவே எழுந்தன. இத்தனை நகைகளையும் பொன் நாணயங்களையும் என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டான் கொள்ளையரில் மிக உயரமாக நின்ற யவனன் ஒருவன்.

இவற்றை இருக்க வேண்டிய இடத்தில் வைத்துச் செய்ய வேண்டிய பணிக்கு உபயோகப்படுத்துவதாக உத்தேசம்" என்றான் இளையபல்லவன். அந்த யவனன் மீது கண்களைத் திருப்பி.

"இருக்க வேண்டிய இடம் எது? செய்ய வேண்டிய பணி எது?" கொள்ளையர் கூட்டத்தில் நின்ற அரபு நாட்டான் ஒருவன் இந்தக் கேள்வியை வீசினான்.

இருக்க வேண்டிய இடம் கோட்டைத் தலைவனின் மாளிகையிலுள்ள பொக்கிஷ அறை. செய்ய வேண்டிய பணி இந்தக் கோட்டையிலுள்ள மக்களை காப்பது என்று இளையபல்லவன் கூறினான் அந்த அராபியனைப் பார்த்து.

"செய்ய வேண்டிய பணி இந்தக் கோட்டை மக்களைப் பாதுகாப்பதானால் படை திரட்ட வேண்டும். அதைத்தான் நீங்கள் செய்ய உத்தேசிகக்கவில்லையே?" என்று சந்தேகம் கிளப்பினான் சீனன் ஒருவன்.

"ஆம் ஆம்! பின் என்ன செய்ய உத்தேசம்?" என்று பல குரல்கள் கிளம்பின.

இளையபல்லவன் அவர்களைச் சுற்றித் தன் கண்களை ஓடவிட்டான். "படை எதற்காகத் திரட்ட வேண்டும்? இந்தக் கோட்டையில் எத்தனை காவல் வீரர்கள் இருக்கிறார்கள்? என்று வினவினான் குரலில் ஏதோ புது அர்த்தம் தொனிக்கும் முறையில்.

"இரண்டாயிரம் பேர்தான் இருக்கிறார்கள்" என்றான் நகர மக்கள் கூட்டத்திலிருந்து முன்னணிக்கு வந்த ஒருவன். அவனைக் கூர்ந்து நோக்கிய இளையபல்லவன். "நகர மக்களாகிய உங்கள் தொகை எவ்வளவு?" என்று வினவினான்.

"அதிகமில்லை, சுமார் ஆயிரம் குடும்பங்கள் தான் உண்டு" என்றான் அந்தக் குடிமகன்.

"அவற்றில் சுமார் ஐந்நூறு பேர் போருக்குத் தேறமாட்டார்கள்?

"தேறுவார்கள், ஆனால்.."

"என்ன ஆனால்..."

போர்ப் பயிற்சி இல்லை அவர்களுக்கு."இதைக் கேட்டதும் இளையபல்லவன் ஆச்சரியம் ததும்பும் விழிகளைப் பலவர்மன் மீது திருப்பி, "இது உண்மையா கோட்டைத் தலைவரே?" என்று வினவினான்.

எதற்காக அந்தக் கேள்வியை இளையபல்லவன் அத்தனை பேர் முன்னிலையில் தன்னைக் கேட்கிறான் என்பதைப் புரிந்து கொண்டதால் உள்ளூரக் கோபத்தால் கொந் தளித்த பலவர்மன் உணர்ச்சிகளை வெளிக்குக் காட்டாமலே "ஆம்" என் பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தான்.

இளையபல்லவன் முகத்தில் ஆச்சரிய ரேகை பலமாகப் படர்ந்தது. "என்ன விந்தை இது! ஸ்ரீ விஜயத் தலை நகரத்திலிருந்து வெகு தூரத்திலிருக்கிறது இந்தக் கோட்டை பின்னாலுள்ள காட்டைத் தாண்டி நெடுந்தூரம் சென்றால் தான் நாகரிக்கத்தையும் பெரு நகரங்களையும் கண்ணால் பார்க்கலாம். இங்கோ சதா பூர்வகுடிகளைப் பற்றிப் பயமும் இருக்கிறது.

இத்தனை இருக்கையில் நகர மக்களைப் போர்ப் பயிற்சியின்றி எப்படி வைத்திருக்கிறீர்கள்!" என்று, வியப்பு பெரிதும் குரலில் மண்ட பலவர்மனை நோக்கி வினவிய இளையபல்லவன் மீண்டும் கூட்டத்தை நோக்கித் திரும்பி "ஆட்களின் தொகையால் மட்டும் ஒரு நகரம் பாதுகாக்கப்படுவதில்லை.

அவர்கள் துணிவு, எச்சரிக்கை இவற்றாலேயே காக்கப்படுகிறது. இந்தக் கோட்டையின் இரண்டாயிரம் வீரர்களையும் நீங்கள் கூறும் ஐந்நூறு பெருமக்களையும் திரட்டி, சரியான போர் முறைகளையும் பாதுகாப்பு முறைகளையும் சொல்லிக் கொடுத்தால் இந்தக் கோட்டையைப் பெரும் சைன்னியங்களிடமிருந்தும் பாதுகாக்கலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

399

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## உங்கள் மனதில் எழும் சந்தேகங்களுக்கான பதில்கள்

**எனக்கு 45 வயது. மலச் சிக்கல் உள்ளது. இதனால் உடலில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதற்கு சரியான தீர்வு சொல்லுங்கள்.**

மலச்சிக்கல் எனப்படுவது ஒரு வாரத்தில் 3 தடவைகளுக்கு குறைவாக மலம் கழித்தல் அல்லது மலத்தின் கடினத் தன்மை அல்லது மலம் கழித்தலிலுள்ள கடினத்தன்மை அல்லது பூரணமாக மலம் கழிக்கவில்லை என்ற உணர்வு என வரையறை செய்யலாம்.


பொதுவாக மலச்சிக்கலானது முறையற்ற உணவுப் பழக்கங்கள், நீர் அருந்துதல் போதாமை, ஒழுங்கற்ற முறையில் மலங் கழிக்க செல்லுதல் போன்றவற்றினால் ஏற்படலாம். இவற்றை விட சில மருத்துவ காரணங்களாலும் மலச்சிக்கல் ஏற்படலாம். உதாரணமாக தைரொக்சின் குறைபாடு, வேறு சில மாத்திரைகள் பயன்படுத்துதல் வேறு குடல் சம்பந்தமான நோய்கள் போன்றவையாகும்.

எனவே நீங்கள் மலச்சிக்கலைத் தவிர்ப்பதற்கு ஒவ்வொரு நாளும் குறைந்தது 2 லீற்றர் நீராவது அருந்த வேண்டும். உங்கள் உணவில் அதிகளவு நார்ப்பொருள் உள்ள உணவுகளை, பழங்களை, மரக்கறிகளை அதிக அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றை விட நீங்கள் தினமும் குறித்த ஒரே நேரத்தில் மலங்கழிக்க செல்ல உங்களை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வர உங்கள் மலச்சிக்கல் நீங்கும். இவற்றை விட நீங்கள் வேறு ஏதாவது மலச்சிக்கலை ஏற்படுத்தக் கூடிய மாத்திரைகளை பயன்படுத்தினால் அவைபற்றி உங்கள் வைத்தியரிடம் கேட்டு அவற்றை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இவற்றுக்கு உங்கள் மலச்சிக்கல் குணமடையாதுவிடின் வைத்தியரை நாடி உங்களிற்கு மேற்குறிப்பிட்டது போன்று வேறு ஏதாவது காரணங்கள் உண்டா என்று அறிந்து அவற்றிற்கு உரிய சிகிச்சையை பெற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் உடலில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது. என குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் அவை என்ன என குறிப்பிடப்படவில்லை. உங்களிற்கு மலச்சிக்கலுடன் நிறை அதிகரித்தல், பசியின்மை, குளிரை தாங்கமுடியாமை, தோல் உலர்வடைந்து காணப்படல், பகலில் நித்திரை தூக்கம், தலைமுடி உதிர்த்தல், போன்றன காணப்படின் இவை தைரொயிட் குறைபாட்டிற்குரிய அறிகுறிகளாகும். எனவே நீங்கள் வைத்தியரை நாடி அதற்கு உரிய சிகிச்சை பெற்றுக்கொள்வது சிறந்தது.

**எனது வயது 51. ஒன்பது மாதங்களுக்கு முன் RBS செய்த போது 209mg/ dl ஆக இருந்**



**தது. HbA1C டெஸ்ட் 7.7 ஆக இருந்தது. அன்றிலிருந்து சுமார் 6 மாதங்கள் நான் கடுமையான உடற்பயிற்சி செய்து வந்தேன். ஒவ்வொரு கிழமையும் இரத்தப் பரிசோதனை செய்து வந்தேன். FBS சராசரியாக 121 இல் இருந்தது. மீண்டும் HbA1C டெஸ்ட் செய்த போது 6.7 ஆக இருந்தது.எனது தற்போதைய உடல் நிறை 60kg. உயரம் 170cm. எனக்கு உண்மையில் சலரோக நோய் இருக்கிறதா? எனக்கு இது சம்பந்தமான வைத்திய ஆலோசனை தருவீர்களா?**

முதலில் உங்களுடைய நிலை சலரோக நிலையா அல்லது சலரோகத்திற்கு முந்திய நிலையா எனப் பார்ப்போம். சலரோகத்திற்கு முந்திய நிலையின் போது சாப்பாட்டிற்கு முன்னராக குருதிக் குளுக்கோசின் அளவு 100mg/dl -125mg/dl இற்கும் இடையிலும் HbA1C ஆனது 5.7 - 6.4 இற்கும் இடையிலும் இருக்கும் HbA1c ஆனது 6.5 இற்கு மேற்பட்டிருப்பின் அது சலரோக நோய் உள்ளதாக கொள்ளப்படும். உங்களிற்கு சலரோக நோய் உள்ளது. Metformin என்ற மாத்திரை தொடங்க வேண்டும். உங்களுடைய தற்போதைய உடற்திணிவுச் சுட்டியானது 22.49 kgm-2 ஆக உள்ளது. ஒருவருடைய உடற்திணிவுச்சுட்டியானது 18.5 - 23 எனும் அளவினுள் இருக்கலாம். எனவே உங்களுடைய நிறை சாதாரண அளவிலேயே உள்ளது.எனவே நீங்கள் வேகமான நடை, ஓடுதல், மிதி வண்டி செலுத்துதல், நீந்துதல் போன்ற காற்றுப் பயிற்சியினை நாளொன்றிற்கு 30 நிமிடங்கள் செய்வது சிறந்தது. அத்துடன் உணவுக்கட்டுப்பாட்டினைக் கடைப்பிடிப்பதன் மூலம் உங்களின் ஆரோக்கியத்தைப் பேண முடியும்.

**எனக்கு வயது 31 எனது இரண்டு விதைகளும் விதைப்பையினுள் இருக்கின்றது. ஆனால் ஒன்று உயரமானதாகவும் மற்றையது பதிவாகவும் உள்ளது. இது ஒரு நோயா? இதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?**

உயர வித்தியாசம் என்பது இயற்கையானது. இது நோயின் அறிகுறி அல்ல. உங்களுடைய விதைப்பையில் ஒரு விதை மாத்திரமே இருந்து மற்றையதை அடையாளப்படுத்த முடியாமல் இருந்தால் உடனடியாக நீங்கள் வைத்திய ஆலோசனையைப் பெறவேண்டும்.

விதையானது விதைப்பையினுள் இறங்காது வயிற்றினுள்ளேயே காணப்படின் பல பிரச்சினைகள் ஏற்படும். ஆனால் உங்கள் விதையானது விதைப்பையினுள் இறங்கியிருப்பதால் இது பற்றிக் கவலை கொள்ளத்தேவையில்லை.

**வயது 32 ஆண் தற்போது தான் திருமணம் முடித்தேன். ஆனால் எனக்கு நீரிழிவு நோய் உள்ளது. இதனால் குழந்தை பெறுவதில் சிக்கல் இருக்குமா?**

நீரிழிவு நோயை தகுந்த முறையில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் ஏனைய சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதைக் குறைக்க முடிவதைப் போலவே, பாலியல் சம்பந்தமான பிரச்சினைகளையும் பெருமளவில் தவிர்த்துக் கொள்ள முடியும். எனவே குழந்தைகள் பெற்றுக் கொள்வதிலும் பிரச்சினைகள் இருக்க போவதில்லை. நீங்கள் இது சம்பந்தமாக மனக்குழப்பம் அடையத் தேவையில்லை. நீரிழிவை மருத்துவ ஆலோசனைகளுக்கமைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் அநாவசிய பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

**நாளாந்தம் பசுப்பால் அருந்துவதால் சளிபிடிக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?.**

சிலருக்கு பால்குடிக்கும் போது சளிபிடிப்பது போன்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படுகிறது. இதற்கு காரணம் பசுப்பாலிற்கு அவர்களில் ஏற்படும் ஒரு ஒவ்வாமை வகையான வெளிப்பாடாகும். பால்குடிக்கும்போது சளிபிடிக்கும் தோற்றப்பாடு ஒரு பிரச்சினையாக அமைந்தால் பசுப்பால் குடிப்பதை நிறுத்திக் கொள்வது நல்லது. எனவே நீங்கள் பால் குடிப்பதை நிறுத்திவிட்டு பால்மா வகைகள் அல்லது ஆட்டுப்பாலைப் பாவித்து பாருங்கள் அதனால் உங்களிற்கு ஒரு பிரச்சினையும் ஏற்படாவிடின் தொடர்ந்து பாவிக்கலாம். உங்களிற்கு எல்லா வகையான பால், பால்மா, பால் சேர்த்த உணவு வகைகள் அனைத்திற்கும் ஒவ்வாமை வகையான தாக்கம் ஏற்படின் பால் உற்பத்தி பொருட்களைப் பாவனையை முற்றிலும் நிறுத்திவிட்டு வேறு வகையான புரதங்களை, சோயா, பால், முட்டை, மீன், என்பவற்றை சேர்த்துக் கொள்ளலாம்.


சி.சிவன்சுதன்,
வைத்திய நிபுணர்,
யாழ்.போதனாவைத்தியசாலை.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமபிதா காட்டிய பாதை

## நாம், இயேசு நம்பியிருப்பதைச் செய்வோம்



நாம் இயேசு விண்ணேற்ற மடைந்த திருவிழாவை இன்று கொண்டாடுகின்றோம். இறைதந்தையின் பெயரையே உயிர் மூச்சாக உச்சரித்த இயேசு, தந்தையின் விருப்பத்தைச் செய்து முடிப்பதையே உணவாகக் கொண்ட இயேசு, தந்தையைச் சென்றடையும் நிகழ்வே விண்ணேற்பு. தந்தையிடமிருந்து தந்தையின் சார்பாக உலகத்திற்கு வந்த இயேசு தம் பணி முடித்த பின் மனிதரின் சார்பாக தந்தையிடம் செல்கிறார். தந்தையை மகிமைப்படுத்தத் தம் மகிமை யைத் துறந்து வந்த இயேசு தந்தையிடமிருந்து மீண்டும் மகிமையைப் பெறுகின்ற நேரம் தான் விண்ணேற்பு. மாட்சி பெற்ற இயேசு தந்தை யிடம் சென்ற மாறுபட்ட பிரசன்னத்தால் நம்மோடு இருப்பதையே விண்ணேற்பு உணர்த்துகிறது. மேலே-கீழே, விண்ணகம்-மண்ணகம் என்ற பாகுபாடுகலெல்லாம் மறையுண்மைகளை நாம் புரிந்து கொள்ள மனிதப் புத்திக்குத் தேவையான உருவகங்கள் என்றே கொள்ள வேண்டும்.

இயேசு விண்ணகம் சென்ற பின் இயேசுவும் அதிதூதரான புனித காபிரியேலும் முதல் சந்திப்பில் கீழ்வருமாறு உரையாடினார்கள் எனக்கற்பனை செய்தால்:-

காபிரியேல் தூதர்: ஆண்டவரே! சிலுவைப்பாடுகளின் மரணத்தால் நீர் பெற்ற காயங்கள் கூட இன்னும் ஆறவில்லையே. மக்களுக்காக நீர் செய்த எண்ணிலடங்கா தியாகங்களையும் அவர்கள் தெரிந்து கொண்டார்களா?

இயேசு: இல்லை தூதரே, இல்லை, பாலஸ்தீனத்தில் கொஞ்ச மக்களுக்குத்தான் தெரிய வந்திருக்கிறது.

காபிரியேல் தூதர்: உலக மக்கள் எல்லாரும், உம்முடைய அன்பைத் தெரிந்து கொள்ள என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்?

இயேசு: பேதுரு தலைமையில் சீடர்களையும், மற்ற சில நண்பர்களையும் இந்தப் பணிக்கு அமர்த்தியிருக்கிறேன். அதைக்கேட்டவர்கள், இன்னும் மற்றவர்களுக்குச் சொல்வார்கள். இப்படியே, உலகத்தின் கடை எல்லையில் இருக்கும் எல்லாரும் என் அன்பை அறிந்து கொள்வார்கள்.

காபிரியேல் தூதர்: ஆண்டவரே! என்ன உம்மைத் தெரியாது எனக்கூறிய பேதுருவும், உம்மைக் கைது செய்தபோது உம்மைவிட்டு ஓடிவிட்ட சீடர்களுமா உம் பணியைத் தொடரப் போகிறார்கள்?

இயேசு: ஆம், அவர்களைத் தான் நம்பி இருக்கிறேன்.

காபிரியேல் தூதர்: ஆண்டவரே பேதுருவும் மற்ற நண்பர்களும், சோர்வடைந்து விட்டால் என்ன செய்வீர்? வேறு திட்டங்கள் எவையேனும் வைத்து இருக்கிறீரா?

இயேசு: தூதரே, வேறு திட்டங்கள் எதுவும் என்னிடமில்லை. அவர்களைத் தான் நான் நம்பியிருக்கிறேன்.


ஆம், அன்பர்களே இயேசு நம்பியிருப்பது எம்மைத் தான். இயேசுவிடம் வேறெந்தத் திட்டமும் இல்லை. உலகம் முடியும் வரை எம்மோடு இருப்பதாகக் கூறிய இயேசு புதிய சத்தியையும், அருளையும் தந்து நாம் அவருடைய சாட்சிகளாக இருக்க வழிகாட்டுவார். நாம் அவருடைய போதனைகளுக்குப் பிரமாணிக்கமாக இருக்கவேண்டும். உலகின் கடை எல்லை வரை நாம் இயேசுவிற்குச் சாட்சிகளாக இருக்க வேண்டும்.

விண்ணகம்சென்ற ஆண்டவர் தம் வழியாகக் கடவுளை அணுகிச்செல்வோரை முழுவதுமாக மீட்க வல்லவராயிருக்கிறார். அவர்களுக்காகப் பரிந்து பேசுவதற்கென என்றுமே வாழ்கிறார்.

இயேசுவின் பெயருக்கென்று தனி சத்தி உண்டு. இயேசுவின் பெயரிலே நம்பிக்கை வைப்போர், தம் பாவங்களிலிருந்து மீட்படைவர். அருங்குறிகள் பல செய்வர். இயேசு வின் பெயரே போதும் எல்லாம் நடக்கும். எனவே விண்ணெழுந்த இயேசு மண்ணக மக்களோடு நெருங்கிய உறவு கொண்டிருக்கிறார் என்பதை ஆழ்ந்து விசுவாசிப்போம். அந்த நம்பிக்கை நம்மை வழி நடத்துவதாக. ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்பு விழா நமது வாழ்வின் இலக்கை ஆய்வு செய்ய அழைப்பு விடுக் கிறது. அந்த இலக்கு இயேசு நம்பியிருப்பதை, நாம் செய்வது தான்.

ம.பிரான்சிஸ் -
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# இன்று ஒரு தகவல் 121



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இனிப்பும் கசப்பும்

ஏன் தேநீரிலே சர்க்கரை போட மறந்தாய்? என்று கணவர் கத்துவார். மறந்தும் தேநீரிலே சர்க்கரை போட வேண்டாம் என்று டொக்டர் சொல்லியிருக்கிறார் என்று அந்த அம்மா சத்தம் போடுவார். இது சகஜமாக நாம் பார்க்கின்ற சமாச்சாரம் தான். இனிப்பாக இருக்கின்ற சர்க்கரை இல்லறத்திலே புகுந்து எவ்வளவு சங்கடத்தை உண்டாக்கி விடுகிறது பார்த்தீர்களா?

ஆபிரிக்காவிலே ஒரு செடி இருக்கிறது. அதிலே இருந்து டேலிம் என்று ஒரு புரதம் எடுக்கிறார்கள். இது சர்க்கரையை விட ஐயாயிரம் மடங்கு அதிக இனிப்பு உள்ளதாக இருக்கின்றதாம். இயற்கையாக செடியில் இருந்து கிடைக்கின்ற இனிப்புத் தானே இது. அதனாலே அதை ஆகாரத்திலே சேர்ப்பதனாலே கெடுதல் ஒன்றும் வருவதில்லையாம். இப்போது அதை சுவிங்கம், குளிர்பானங்கள், கால் நடைத்தீவனம் இவையெல்லாம் உபயோகப்படுத்துவத்துவதற்கு பிரிட்டன், அமெரிக்கா,ஜப்பான் இது மாதிரியான நாடுகளிலேயெல்லாம் அரசாங்கம் அனுமதி கொடுத்து இருக்கிறது.

நமது நாட்டிலேயும் இதை உணவிலும் மருந்துகளிலும் சேர்ப்பதற்கு சம்பந்தமாக ஆராய்ச்சிகளும் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

C.F.T.R.I என்று சொல்கிறோம் அல்லவா? Central Food Technological Research Institute இது மைசூரில் இருக்கின்றது. அங்கே இதனுடைய இனிப்புத்தன்மையை பற்றி வெவ்வேறு கோணத்தில் ஆராய்ச்சி நடக்கின்றது. இந்த பொருளுடைய இனிப்புத் தன்மையை நாம் உணருவதற்கு சர்க்கரையை விட ஒரு சில விநாடிகள் கூடுதலாக இருக்கும்.

ஆனால் சாப்பிட்டதற்கு பின்பு நமது நாக்கிலே ஒரு இனிமையான உணர்வு இருக்கும். இதற்கு இன்னொரு விசேட தன்மை உண்டு. அதாவது உணவிலே நாம் ஏதாவது வாசனைப் பொருளை சேர்க்கின்றோம் தானே. அந்த வாசனையை இது அதிகப்படுத்திக் கொடுக்கும். அதாவது இது ஒரு Flavour Enhancer.

சரி இந்த இனிப்பு ஒரு பக்கம் இருக்கட்டும். இப்போது கசப்புக்கு வருவோம். உலகத்திலே கசப்பான பொருள் எது தெரியுமா? Denatonium Saccharide.

இது தான் உலகமகா கசப்பு. ஏற்கனவே உலக மகாகசப்பு என்று பெயர் வாங்கிய பொருள் Denatonium Benzoate. அதைவிட இது ஐந்து மடங்கு அதிக கசப்பு.

கசப்பு என்றால் எப்படிப்பட்ட கசப்பு என்கிறீர்கள். இந்த பொருளிலே ஒரு பங்கு எடுத்துக் கொண்டு அதை நூறு மில்லியன் பங்கு தண்ணீரிலே கரைத்தாலும் அந்த தண்ணீரிலே ஒரு துளியைக் கூட வாயிலே வைக்க முடியாதாம். அந்த அளவுக்கு சகிக்க முடியாத ஒரு கசப்பு.

இரண்டு அமெரிக்க விஞ்ஞானிகள் ரொம்பவும் தீவிரமான ஆராய்ச்சிக்குப் பிறகு இந்தக் கசப்பான பொருளை கண்டுபிடித்திருக்கிறார்கள். அது சரி இந்த அளவுக்கு கசப்பான ஒரு பொருளை கண்டுபிடிப்பதற்காக எதற்காக தலையைப் பிய்த்துக் கொண்டு ஆராய்ச்சி செய்ய வேண்டும்? அப்படி என்று கேட்கத் தோன்றும்.

அதற்கும் சில காரணங்கள் உண்டு. சும்மா பொழுது போகவில்லை என்று வேலை மினக்கட்டு இதை செய்து விட்டாய் அல்லோ! இந்த கசப்பான பொருளுக்கு நிறைய உபயோகம் உண்டு. Industrial Alcohol இருக்கு அல்லோ அது தான் Methyl Alcohol அது ஒரு நச்சுப்பொருள்.

அதை சாப்பிட்டால் கண்பார்வை தெரியாமல் போய்விடும். கொஞ்சம் அதிகமாக சாப்பிட்டால் உயிரே போய்விடும். அந்த அளவுக்கு விஷம்.

இந்த Methyl Alcohol ஐ போதை தரும் Ethyl Alcohol என்று நினைத்து குடித்துக்கொண்டு பலபேர் ஒரேயடியாக போய் சேர்ந்திடுவார்கள்.

இது மாதிரி இவர்கள் போதைக்காக Methyl Alcohol ஐ குடிக்காமல் இருப்பதற்காக இந்த உலகமகா கசப்புப் பொருளிலே கொஞ்சம் அது கூட கலந்து விட்டால் போதும். அவ்வளவுதான்.அதை வாயிலேயே வைக்க முடியாது. அப்புறம் எங்கே குடிக்கிறது?

சில கேபிளை எல்லாம் எலிகள் கடித்து விடுவதில்லை.அதனாலே அந்த கேபிளிலே இந்த இரசாயனத்தை கலந்து விட்டால் எலி அந்த பக்கமே வராது. சரி இப்போது இந்த கசப்பை விட்டு விட்டு மறுபடியும் இனிப்புக்கு வாருங்கள். தேன் இருக்குத்தானே.அதனுடைய உபயோகம் பல பேருக்கும் தெரியும். காயத்தை ஆற்றக்கூடிய சக்தி அதற்கு உண்டு என்பதும் தெரியும்.

இருந்தாலும் நைஜீரியாவிலே உள்ள அறுவை சிகிச்சை நிபுணர்கள் காயங்களை ஆற்றுவதற்கு தேனைத் தான் உபயோகப்படுத்துகின்றார்கள். அங்கே ஒரு வைத்தியர் மூன்று வருட காலஇடைவெளியிலே 59 நோயாளிகளை தேன் மூலமாகவே குணப்படுத்தியுள்ளார்.

தீக்காயங்கள் Bed sores, Ulcer இதையெல்லாம் கூட குணப்படுத்தியிருக்கின்றார். சுத்திகரிக்கப்படாத தேனாக இருக்கவேண்டும். அதை காயத்திலே தடவினால் கொஞ்ச நாளிலே ஆறிப்போய் விடும். ஆகஇன்றைக்குத் தகவலில் இருந்து நாம் தெரிந்து கொண்டது என்னவென்றால் இனிப்பு-கசப்பு இது இரண்டும் வாழ்க்கைக்கு அதிகம் தேவை.

இல்லற வாழ்வே இனிப்பும் கசப்பும் கலந்த தேநீர் மாதிரி தான் என்று சொல்கின்றவர்களும் உண்டு.

இல்லறம் என்றால் அதில் கணவன் உண்டு. மனைவி உண்டு.

அப்படி என்றால் அதிலே யாரு இனிப்பு? யாரு கசப்பு? இந்த கேள்விக்கு என்னிடம் பதில் உள்ளது. அதை உங்களுக்கு சொல்லி விட வேண்டும் என்ற ஆசையும் இருக்கிறது. ஆனால் துணிச்சல் இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தலுக்கு எதிரான அடக்குமுறை

# இலங்கையில் முடிவுக்கு வர வேண்டும்

## பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் அழுத்தம்

**(கொழும்பு)**

**தமிழர் தாயகப்பகுதிகளான வடக்கு-கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளிற்கு எதிரான இலங்கை இராணுவத்தின் தொடரும் ஒடுக்குமுறைகள் குறித்து கவலை வெளியிட்டுள்ள பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் கொல்பேர்ன் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளிற்கு எதிரான ஒடுக்கு முறைகள் குறித்து பிரிட்டன் தெளிவான எச்சரிக்கைகளை விடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.**



தமிழ்நாட்காட்டியின் மிக வும் துயரமான நாட்களை முள்ளிவாய்க்கால் குறிக் கின்றது.

முள்ளிவாய்க்காலின் இறுதி இராணுவ நடவடிக் கையின் போது 169 000 தமிழர்கள் கொல்லப்பட்ட னர் என மதிப்பிடப்படுகின் றது இது ஒரு இனப்படு கொலை என பலர் கருது கின்றனர்.

இலங்கை இராணுவம் யுத்தசூன்ய வயைத்தில் கண் மூடித்தனமான குண்டு வீச்சினை மேற்கொண்டது படுகொலைகள் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் போன்றவற்றில் ஈடுபட்டது.

சுதந்திரமான வெளிப்ப டையான ஜனநாயக சமூ கத்தில் மக்கள் நினை வேந்தலில் ஈடுபடுவதற்கு எதிராக அடக்குமுறையில் ஈடுபடமுடியாது சுதந்திர மான நியாயமான ஜன நாயகத்தில் இதனை செய்ய வேண்டும் என கொல்பேர்ன் தெரிவித்துள் ளார்.


ஒவ்வொரு வருடமும் நாங்கள் இதனை கேள்விப் படுகின்றோம். நினைவேந் தல் குழப்பப்படுவது குறித்த கதைகளை கேட்கின்றோம் மக்கள் காரணமில்லாமல் கைதுசெய்யப்படுகின்றனர். இதன் காரணமாக இதனை நிறுத்தவேண்டும் என்ற வலுவான செய்தியை பிரி ட்டன் தெரிவிக்க வேண் டும் என அவர் தெரிவித்துள் ளார்.

2009 இல் இடம்பெற்ற சம்பவங்களை இனப்படு கொலை என பிரிட்டன் பிர கடனம் செய்வதற்கான தேவை குறித்த கேள்விக்கு பதிலளித்துள்ள அவர் இத ற்கான முயற்சிகளில் தானும் தமிழர்களிற்கான அனைத்து கட்சி பாராளு மன்ற குழுவினரும் ஈடுபட் டுள்ளதாக தெரிவித்துள் ளார். (ni-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 150 | 120-170 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 220 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 60-70 | 100 |
| தக்காளி | 100 | 150 | 150 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 120-130 | 200 |
| கோவா | 150 | 200 | 150 | 200 |
| கரட் | 300 | 260 | 220 | 280 |
| பூசணி | 80 | 180 | 100 | 80 |
| புடோல் | 70 | 300 | 100 | 160 |
| வாழைக்காய் | 80 | 90 | 70-80 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 280 | 150-180 | 250 |
| பாகற்காய் | 300 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 180 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 700 | 700-1000 | 450 |
| லீக்ஸ் | 250 | 260 | 300 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 320 |
| கறிமிளகாய் | 400 | 200 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 650 | 300-700 | 600 |
| போஞ்சி | 300 | 400 | 380 | 400 |
| கத்தரிதம்புள்ள | 130 | 100 | - | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 60-100 | 100 |
| தேசிக்காய் | 1000 | 1200 | 1000-1300 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 40-90 | 80-120 |
| இராசவள்ளி | 300 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | -- | 480 |
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- |

# பண்டிதர் கடம்பேஸ்வரன்



ஒரு காலத்தின் பிரதிநிதி ஒருமுறை கல்கி ஆசிரியர் கிருஸ்ணமூர்த்தி, "யாழ்ப்பா ணத்திலே ஒருவன் தடக்கி விழுந்தாலும் ஒரு தமிழ்ப் பண்டிதர் மீது தான் தடக்கி விழுவான்" என்றெழுதினார்.

யாழ்ப்பாணத்தின் பண்டித மரபு இப்பொழுது சிதைந்து போகின்றது. ஆனால் இந்தச் சூழலிலும் பண்டித மரபை ஆர்வத்தோடு கட்டிக் காப்பவர் கள் ஒரு சிலர் இருக்கின்றனர். பண்டிதர் கடம்பேஸ்வரன் பண் டித மரபின் அப்பழுக்கற்ற தமிழ் பிரதிநிதியாக நம் மத்தியில் வாழ்ந்து ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி நம்மை விட்டுப் பிரிந்து சென்றார்.

பண்டிதர் கடம்பேஸ்வ ரனை நான் மனமார நேசித் தேன். பொருளாசையும் புகழா சையும் நிரம்பிய சமுதாயத் திலே பண்டிதர் அவர்கள் தமிழ் ஆர்வத்தோடு பேணி வந்தவர்.

இவருடைய அர்ப்பணிப்பு, நேர்மைத்திறன், எளிமை என்னைப் பெரிதும் கவர்ந்தன. ஆரிய திராவிட பாஷா அபிவிரு த்திச் சங்கத்தை தமது உயிரி னும் மேலாக நேசித்தவர். அவ ருடைய தமிழ்ப்பற்றைக் கண்டு நான் அவுஸ்திரேலியாவில் ரூபா ஐம்பதாயிரம் இந்தச் சங்க த்திற்குச் சேர்த்து வழங்கினேன். பண்டிதர் என்னை ஆரிய திரா விட பாஷாவிருத்திச் சங்கத்தின் தலைவராக்கி மகிழ்ந்தார்.

### மறைந்தார் மாண்பு

இச்சங்கம் பல கஷ்டங்களை எதிர்நோக்கியது. பண்டித வகு ப்புக்கள் நடாத்தப்பட்ட ஒரு பாட சாலையை இராணுவம் தனது தேவைக்கு எடுத்துக் கொண் டது. பண்டிதர் அவர்கள் சோ. ப அவர்களையும் என்னையும் அழைத்துக்கொண்டு அரசாங்க அதிபர், ஆளுநர் ஆகியோரைச் சந்தித்தார். அவர் முயற்சி கைகூடவில்லை. பண்டிதர் வகுப்பு நடத்த கைவிடப்பட்ட ஒரு பாடசாலை கூட கிடைக்க வில்லை. இந்த விதமான சோர் வுகளுக்கு மத்தியிலே அவருக்கு ஒரு ஆறுதலின் செய்தி கிட்டி யது: யாழ்.பல்கலைக்கழகம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தினை நடத்தும் பொறு ப்பை ஏற்றுக்கொண்டது. இந்த அரிய நிகழ்ச்சியைக் கண்டு சில வாரங்களில் பண்டிதர் தமது பூலோக வாழ்வை முடித்துக் கொண்டார். தமது வாழ்வு முடி வுக்கு வந்துவிட்டது என் பதனை உள்ளொளியினாலோ வைத்தியர்களின் குறிப்பி னாலோ அறிந்தோ தமது அரிய நூல்கள் இரண்டினை ... அரங்கேற்றும்படி செய்தார். ஒன்று நன்னூல் பற்றியது. மற்றையது தொல்காப்பியம் பற்றியது.

யாழ்.பல்கலைக்கழக முது கலை மாணவர்கள் பண்டித ரின் விரிவுரைகளை கவனமா கக் கேட்பர். பண்டிதரின் மறைவு தமிழ் மாணவர்களு க்கு ஈடு செய்ய முடியாத பேரி ழப்பு. பண்டிதர் கடம்பேஸ் வரன் மறைந்தாரன்றி முடி ந்தாரில்லை. ஒரு காலத்தின் பிரதிநிதியாக நம்மத்தியில் உலாவி வந்த தமிழ்த்தென் றல் என்றுமே நண்பர்கள், மாணவர்கள், உறவினர்கள் உள்ளங்களில் நிலைத்திரு ப்பார். அவரின் நினைவு நிழ லாகும் இந்நாளின் இறைவ னைப் போற்றுவோமாக.

**ஓய்வு நிலை பேராயர்**
**எஸ்.ஜெபநேசன்,**
**முன்னாள் தலைவர்,**
**ஆரிய திராவிட பாஷா**
**விருத்திச் சங்கம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுக்கு உற்சாகத்தையும், தன்னம்பிக்கையும் அளிக்கும் போது தனது சுயமரியாதை தானாகவே உயரும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர்களின் வாழ்வுரிமையையும் இந்தியா பாதுகாக்க வேண்டும்

வடக்கு கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை இந்தியா முன்னெடுக்கும் என இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சீறிதரன் இந்தியத் தூதுவரைச் சந்தித்தபோது, மேற்கண்ட உறுதிமொழியை அவர் வழங்கியுள்ளார்.

நல்லது. வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளை இந்தியா முன்னெடுப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

அதேநேரம் அபிவிருத்திப் பணிகளை மட்டும் ஈழத் தமிழ் மக்கள் இந்தியாவிடம் எதிர்பார்க்கவில்லை.

மாறாக, அபிவிருத்திப் பணிகளுடன் ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையையும் இந்தியா உறுதி செய்ய வேண்டும்.

ஆம், ஈழத் தமிழ் மக்கள் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளனர். உரிய தொழில்துறை இல்லாமையால் கணிசமான தமிழ் இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்பின்றி உள்ளனர்.

அதேநேரம் சிங்களப் பேரினவாதிகள் தமிழ் இளைஞர் யுவதிகளின் பட்டப்படிப்புகளுக்கும் குந்தகம் செய்து வருவது தெரிந்த விடயம்.

அதாவது காலத்துக்குக் காலம் புதுப்புது சட்டதிட்டங்களைப் புகுத்தி, அனைத்து பல்கலைக்கழகங்களிலும் சிங்கள மாணவர்களை இணைக்கின்ற வேலைத்திட்டங்கள் மிக நுட்பமாக நடந்தாகின்றன.

சுருங்கக்கூறின் தமிழ் மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இப்போது ஐம்பது சதவீதமானவர்கள் சிங்கள மாணவர்களாக உள்ளனர்.

இந்த நிலைமை எதிர்காலத்தில் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு உண்டு.

ஆக, தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பு ஏதோவொரு வகையில் தடுக்கப்படுகிறது. இந்தநிலையில் தமிழ் மாணவர்கள் இந்தியப் பல்கலைக்கழகங்களில் இணைந்து பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் அங்கு தொழில்துறைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் இந்தியா உதவ வேண்டும்.

இதன்மூலம் ஈழத் தமிழ் மாணவர்களுக்கு மறுக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்வி கிடைப்பதற்கு இந்தியா உதவ முடியும்.

இதேபோன்று பொருத்தமான கைத்தொழில் முயற்சிகளை நம் தமிழ்ப் பிரதேசத்தில் தொடங்குவதற்கு இந்தியாவின் உதவி கட்டாயமானதாகும்.

உண்மை. வடக்கு கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு உதவி செய்வதற்குத் தாம் தயாராக இருப்பதாக வெளிநாட்டுத் தூதுவர்கள் பலரும் கூறிவருகின்றனர்.

ஆனால் இன்றுவரை ஆன கைத்தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதன் காரணமாக எமது மனித மூலதனம் வீணாகிக் கொண்டிருக்கிறது.

ஆகவே எமது இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய தொழிற்துறைகளை ஆரம்பிப்பதற்கு இந்தியா உதவ வேண்டும்.

இந்தக் கோரிக்கைகள் அனைத்தும் நிலைபேறடைய வேண்டுமாயின், இலங்கையில் தமிழ் மக்களின் உரிமை நிலைநிறுத்தப்படுவது அவசியம். அதனை உடனடியாகச் செய்வது இந்தியாவின் தார்மீகக் கடமையாகும்.

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும் நினைவுஊர்திப் பவனியும் இன்று

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக் கிளையால், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும், முள்ளிவாய்க்கால் நினைவுஊர்திப் பவனி ஆரம்பமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு, உலக தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவுத் தூபி முன்றலில் இடம்பெறும்.

நினைவுஊர்திப் பவனி யாழ். நகரில் தொடர்ந்து பயணிக்கும். மறுநாள் 13ஆம் திகதி திங்கட்கிழமை தென்மராட்சியிலும், 14ஆம் திகதி வடமராட்சியிலும், 15ஆம் திகதி கோப்பாய், மானிப்பாய், நல்லூர் பிரதேசங்களிலும், 16ஆம் திகதி வட்டுக்கோட்டையிலும், 17ஆம் திகதி வேலணையிலும், 18ஆம் திகதி காரைநகரிலும் பயணிக்கும்.

இறுதிநாள் நினைவேந்தல் சங்கானை பேருந்து தரிப்பிடத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தங்கள் பிரதேசங்களுக்கு வரும் பொழுது மக்கள் அணிதிரண்டு ஆத்மார்த்தமாக அஞ்சலிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (ம-7,10)

## பேராசிரியர் வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

### இன்றைய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சு.வித்தியானந்தன் அறக்கட்டளை மற்றும் யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி தமிழ் மன்றம் இணைந்து பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் அரங்கில் யாழ். தேசியக் கல்லூரி பீடாதிபதி திருநாநந்தம் ஜெயக்காண்டீபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய கல்வியற் கல்லூரி மேனாள் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் ஆகியோர் கலந்து கொள்வுள்ளனர்.

இந்நிகழ்வில் யாழ். தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் க.ரட்ணேஸ்வரன் நெறியாள்கையில் கவியரங்கம், "பேராசிரியர் வித்தியானந்தனின் மனப்பதிவுகள்" கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு மற்றும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பழைய மாணவரும் யூனியன் கல்லூரி ஆசிரியர் துரைசிங்கம் அயூரனின் நெறியாள்கையில் காத்தவராயன் கூத்து அளிக்கை ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (நி-6)

## நெடுந்தீவு மக்களின் மின்சார பிரச்சினைக்கு தீர்வு

### யாழ். வந்தடைந்தது புதிய மின்பிறப்பாக்கி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மக்கள் எதிர்கொண்ட மின்சார பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் அதி சக்தி வாய்ந்த மின்பிறப்பாக்கி யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

குறித்த மின் பிறப்பாக்கியை சுன்னாகம் மத்திய மின்சார நிலையத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனை உடனடியாக நெடுந்தீவிற்கு எடுத்துச் சென்று சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஆலோசனைகளை துறைசார் அதிகாரிகளுக்கு வழங்கினார்.

நெடுந்தீவில் மின்சார விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் மின்பிறப்பாக்கி வினைத்திறன் குறைவடைந்தமையினால் அண்மைய நாட்களாக பல மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்பட்டமையினால் பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

## அதிகரித்த வெப்பத்தால் பாதிக்கப்பட்ட மரமுந்திரிகை

### உற்பத்தியாளர்கள் கவலை

(முல்லைத்தீவு)

தற்போது நிலவும் அதிகளவு வெப்பம் காரணமாக மரமுந்திரிகை செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு - முள்ளியவளை மரமுந்திரிகை உற்பத்தியாளர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் உற்பத்தியாளர்கள் கருத்து தெரிவிக்கையில், கடந்த காலங்களை விட இந்த ஆண்டு எமது முந்திரிகை செய்கையில் குறைவான விளைச்சலே கிடைத்துள்ளது.தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக திருப்திகரமான விளைச்சலை பெறுவதற்கு முடியவில்லை.

அரசாங்கத்தால் தமக்கான உதவிகள் எவையும் வழங்கப்படுவதில்லை என மரமுந்திரிகை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-6)

## நான்கு ஆண்டுகளுக்குள் மூடப்பட்ட 81 பாடசாலைகள்

### கல்வி அமைச்சர் சுசில் தகவல்

(கொழும்பு)

கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் சுமார் 81 அரச பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே குறித்த தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

மூடப்பட்ட பாடசாலைகள் அனைத்தும் மாகாண சபைகளின் கீழ் செயற்பட்டவை என்றும், அவற்றின் பௌதீக வளங்களை வேறு பயனுள்ள தேவைகளுக்கு பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், அவ்வாறான ஒரு சில பாடசாலைகள் வேறு கல்வித் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

## வீதி ஒழுங்கை பேணுவதற்கு வடமாகாணத்தில் புதிய திட்டங்கள்

### வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வீதி ஒழுங்குகளை பேணுவதற்கு பொலிஸார் பல புதிய செயற்திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் சி.ஏ.தனபால தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஓட்டுநர்கள், வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அடையாளம் காணப்பட்ட இடங்களில் புதிய போக்குவரத்து அறிகுறி பலகைகளை நிறுவுதல், வாகன நிறுத்தங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல், போக்குவரத்து விதிகளை மீறுபவர்களுக்கு அபராதம் விதித்தல் போன்ற பல நடவடிக்கைகள் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேவேளை வடமாகாணத்தை அதிகபட்சமாக வீதி ஒழுங்குகளை பேணும் மாகாணமாக மாற்றுவதே பொலிஸாரின் நோக்கமாகும் என வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (நி-6)

## க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான இணையவழி கற்கை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தர 2024, 2025 மாணவர்களின் தமிழ்பாட அடைவு மேம்பாட்டிற்கான யூடியுப் இணைய வலைத்தளத்தினூடாக ஆசிரியர் நாக.தமிழிந்திரனின் கற்பித்தல் இடம்பெறுகிறது. THAMILINTHIRAN எனும் வலைத்தள முகவரியூடாக குறித்த பாடநெறிக் கற்கையில் இணைய முடியும். மேலதிக தகவலுக்கு 076 772 7398 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவு நீரை வீதிக்கு விட்ட வர்த்தகருக்கு எதிராக நடவடிக்கை

(குருமன்காடு)

வவுனியா, வைரவபுளிய ங்குளம் பகுதியில் உணவக த்துடன் கூடிய வெதுப்பகம் ஒன்றின் கழிவு நீரை சீரற்ற வகையில் வீதிக்கு வெளி யேற்றிய வர்த்தகருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன் றுடன் கூடிய வெதுப்பகத்தின் கழிவு நீரானது தாங்கி ஒன்றிற்கு சென்று அங்கிருந்து முறையான ஒழுங்கமைப்பு இன்றி வாய்கால் ஊடாக வீதிக்கு வந்துள்ளது. இவ்வாறு தொடர்ச்சியாக வந்த நிலையில் அப்பகுதியில் துர் நாற்றம் வீசியதுடன், வீதியோர வியாபாரிகள், பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர் நோக் கயிருந்தனர்.

இது தொடர்பில் வவுனியா நகரசபை சுகாதார பரிசோத கர்களுக்கும் தெரியப்படு த்திய தையடுத்து சம்பவ இடத் திற்கு வருகை தந்த சுகாதார பரிசோதகர்கள் வெதுப்பகத்தின் கழிவு நீர் முகாமைத்துவத்தை பார்வையிட்டதுடன், அவர்க ளுக்கு கடுமையான எச்சரிக்கை வழங்கி குறித்த கழிவு நீர் முகா மைத்துவத்தை சீர் செய்து விட்டு வெதுப்பகத்தை திறக்குமாறு கூறி அதனை பூட்டினர்.

இதன் பின்னர், குறித்த கழிவு நீர் வெளியேற்றும் செயன்முறை சீர் செய்யப் பட்டதுடன், சுகாதார பரிசோ தகர்களின் அனுமதியுடன் குறித்த வெதுப்பகம் மீளவும் திறக்கப்பட்டது. (நி-6-250)







யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத் துறையின் முதுநிலை விரிவுரையாளரான மேரி வினிபிரிடா சந்திரசேகரின் "ஞானப்பள்ளு: இலக்கியம் - இறையியல் - வரலாறு" மற்றும் "திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் சிறப்ப, கட்டடக்கலைகள்" ஆகிய இரண்டு நூல்களின் அறிமுக நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி மாலை 4 மணிக்கு அகவொளி மண்டபத்தில் சிறப்புற நடந்தேறியது.

இந் நிகழ்வு யாழ்ப்பாண மறை மாவட்ட பொதுநிலையினர் ஆணைக் குழு மற்றும் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிக த்துறை ஆகியவற்றால் இணைந்து ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டிருந்தது.

# உயிர் நீத்தவர்களின் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைப்பு

(நெளுக்குளம்)



முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் வாரமானது வடக்கு, கிழக்கு மாகாணங்க ளில் நினைவு கூரப்பட்டு வருகின்றது. அந்த வகையில் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களின் நினைவாக நேற்று விசுவமடு, புதுக்குடி யிருப்பு பகுதிகளில் நினை வேந்தல் முன்னெடுக்கப்பட்டு கஞ்சி காய்ச்சி வழங்கப் பட்டது.

இதேவேளை மன்னார் வலிந்து காணாமல் ஆக்க ப்பட்டோர் சங்கத்தின் ஏற் பாட்டில் மன்னார் பள்ளி முனைப் பகுதியில் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக் கது. (நி-6-285-299)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3114

லது

இனிய அன்னையர் தின நல்வாழ்த்துக்கள்!




நதீஸ்

உங்களை புகழ்ந்து பாடிய என்னை வெறும். கையுடன் அனுப்புகிறீர்களே... மன்னா...



யாரங்கே... இவரது கைக்கு மருதாணி தாணி போட்டு விட்டு அனுப்பி வையுங்கள்...

நமசியா

வெறும் வயித்தோட படுக்க கூடாதுன்னு அம்மா சொன்னாங்க...ஷ அதுதான் சப்பாத்திய போர்த்திக் கொண்டேன்



வதுஸ்

நான் 5 வது படிக்கும் போது எனக்கு ஒரு பொண்ணு ஐ லவ் யு சொன்னா அப்புறம் என்ன ஆச்சு... இப்ப அவ பொண்ணு 5 வது படிக்கிறா...



யாதவ்

கணவன் : ஏய்.. என்னாடி இது..?
மனைவி: இதான் ... கொத்து தோசைங்க..
கணவன் : என்னது கொத்து தோசை'யா..
மனைவி : ஏன் கொத்து பரோட்டா'ன்னு இருக்கும் போது... கொத்து தோசை'ன்னு ஒன்னு இருக்கப்படாதா..



சுவஸ்திகா

அவ்ளோ பெரிய சனி, செவ்வாய், புதன் கிரகங்களெல்லாம் சரியா அதோட பாதையில ஒழுங்கா போகுது...



இத்தனூண்டு பைக்க வச்சு கிட்டு ஒருத்தனாச்சும் ஒழுங்கா போறானா பாருங்க..?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

னாலைப் பகுதியைச் சேர்ந்ததாக தெரிவித்து 15 வயது சிறுமியொருவர் கர்ப்பம் தரித்த நிலையில் தனது தாயுடன் குழந்தை பிரசவத்துக்காக நேற்று முன்தினம் மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குழந்தை நேற்று முன்தினம் இரவு பிரசவித்த நிலையில், குழந்தையை அநாதரவாக விட்டுவிட்டு நேற்றுக் காலை குழந்தை பிரசவித்த சிறுமி, அவரது தாய் இருவரும் தலைமறைவாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7,10,33)

## இளவரசர்...

ஐக்கிய அரபு அமீரகத்தின் இளவரசர் ஷேக் ஹஸ்ஸா பின் சுல்தான் பின் சயீத் அல் நஹ்யான் காலமானதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர் ஐக்கிய அரபு அமீரகத்தின் ஜனாதிபதி ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானின் மூத்த மகனாவார்.

இந்நிலையில் இவரது மறைவிற்கு உலகத் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ள நிலையில் ஜனாதிபதி அலுவலகமும் இரங்கல் தெரிவித்துள்ளது. (ம-7,10)

## யுவதிகளை...

சிலரும் இணைந்து நையப்புடைத்த பின், எச்சரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். நேற்று சனிக்கிழமை காலையில் இந்தச் சம்பவம் நடந்தது.

பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவிகள் சிலர் தமது நண்பி யொருவரின் வீட்டுக்குச் சென்றபோதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-7,10)

## வவுனியாவில்...

நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த 15 வயது பெண் ஒருவரை வவுனியா நகரையண்டிய தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்ற இளைஞர் ஒருவர் குறித்த சிறுமிக்கு போதை மருந்து கொடுத்து கூட்டு வன்புணர்வில் ஈடுபட்டதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அண்மையில் சிறுமியின் உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதையடுத்து பெற்றோர் சிறுமியிடம் விசாரித்ததில் சிறுமி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சிறுமியின் பெற்றோர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த வவுனியா பொலிஸார் கூட்டு வன்புணர்வுக்கு உடந்தையாக செயற்பட்டதாக அவரது உறவினரான 20 வயது பெண் ஒருவரும் வன்புணர்வில் ஈடுபட்ட சந்தேகத்தில் வவுனியா நகரப் பகுதியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் கடமையாற்றும் இளைஞன் உட்பட மூன்று இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு பேரும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சிறுமியிடம் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7,10,250)

## தீ மூட்டியதில்...

குடும்பத் தகராறு காரணமாக மேற்படி பெண் தனக்குத் தானே தீ மூட்டியதாக தெரிய வருகிறது.

இதில் படுகாயமடைந்த பெண்ணை மீட்டு உறவினர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளனர்.

மேற்படி பெண் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-7,10,30)

## தமிழினப்...

கால் நினைவுதூபி அமைந்துள்ள பகுதியில் நேற்று சிரமதான பணியும் நினைவேந்தல் நிகழ்வுக்கான அழைப்பு விடுக்கும் ஊடகச் சந்திப்பும் நேற்று மாலை இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பை சேர்ந்த இணைத் தலைவர்களில் ஒருவரான தென் கயிலை ஆதீனத்தை சேர்ந்த தவத்திரு அகத்தியர் அடிகளார் 15 ஆவது இனப்படுகொலை நினைவேந்தலுக்கான அழைப்பை ஊடகங்கள் வாயிலாக விடுத்தார்.

ஒவ்வொரு ஈழத்தமிழனதும் வரலாற்றுக் கடமையும் உரிமையும் கூட. இதை நினைவில் கொண்டு, இன்று வரை நீதி வழங்கப்படாத இனப்படுகொலையின் இவ்வாண்டிற்கான நினைவேந்தல் 05.18 இல் முற்பகல் 10.30 மணிக்கு முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் நடைபெறும்.

எனவே அனைவரும் பேதங்களைத் துறந்து, சுயலாப, சுயவிளம்பரப்படுத்தல்களைக் கடந்து எமது பொது நிகழ்ச்சி நிரலில் ஒன்றுபட்டு தமிழர்களாக இந்நினைவேந்தலில் ஒன்றிணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் அன்று மாலை 6 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் கோவில்களிலும் மணி ஒலி எழுப்புவதுடன் அன்று இயலுமான வரை முள்ளிவாய்க்கால் கஞ்சியையும் பரிமாறி தமிழின அழிப்பினை நினைவுகூருவோம் என்றார். (ம-7,10)

## பெரமுனவின்...

சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் செயற்பாடுகள் குறித்து இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாக ஜூலி சங் தனது உத்தியோகப்பூர்வ எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள இளைஞர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் தொடர்பிலும் இந்த சந்திப்பின் போது தான் நாமல் ராஜபக்ஷவிடம் கேட்டறிந்து கொண்டதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருடன் அரசியல் மற்றும் இருதரப்பு உறவுகள் குறித்த சிறந்த கலந்துரையாடலை முன்னெடுத்திருந்ததாக நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். (ம-7,10)

## ஒரு...

நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 4 ஆயிரத்து 472 பேர் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நடவடிக்கையில் 41 KG ஹெரோயின் போதைப்பொருளும், 43 KG ஐஸ் போதைப்பொருளும் 3 லட்சம் போதை மாத்திரைகளும் 1.500 மில்லியன் பெறுமதியான சட்ட விரோத சொத்துக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7,10)

## முள்ளிவாய்க்...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு யாழ்ப்பாணம் நல்லூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி நேற்று விநியோகிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்பாக கஞ்சி விநியோகிக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் மக்கள் துன்பப்பட்டு, வறுமைப்பட்டு, உணவு இல்லாமல் தவித்தனர். எத்தனையோ சிறுவர்கள், பெரியவர்கள் சொல்ல முடியாத கொடுமைக்கு ஆளானார்கள். வலிகள் நிறைந்த அந்த நேரத்தில் கஞ்சிதான் இலட்சக்கணக்கான மக்களின் உயிரை காத்தது என்ற அடிப்படையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி நினைவை கடத்தும் வகையில் விநியோகிக்கப்பட்டது. (ம-7,10,33)

மஹஜன சம்பத
திகதி 2024.05.11
சீட்டிழுப்பு இலக்கம் 5472
K 9 7 8 5 6 3
அத சம்பத K 8 5 6 3 சீட்டிழுப்பு இலக்கம் 47

தன நிதானய
திகதி - 2024.05.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1502
V 48 50 70 73 V
Double Chance 28807

மெகா பவர்
திகதி 11.05.2024
சீட்டிழுப்பு இலக்கம் 1820
A 14 32 53 70 72
79363

லக்கி 7 VIP
திகதி 2024.05.11
சீட்டிழுப்பு இலக்கம் 0298
S 3 3 4 8 5 0 S

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3714
சீட்டிழுப்பு திகதி 11.05.2024
J 08 43 55 65
J 26201

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.11
சீட்டிழுப்பு இலக்கம் 0781
மேஷம் 02 12 18 61 மேஷம்
36607 28

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா 11.05.2024 வெற்றி வாரம் 180 வர்ணம் நீலம்
S 1 6 4 8 4 3
05743
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,082,840.00
DLB

SUPER BALL 2446 நீலம் 11.05.2024 சனிக்கிழமை
28 29 52 73 N
20978
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,851,692.00

சனிதா திகதி 2024.05.11 வெற்றி வாரம் 4607
25 31 68 74 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,502,715.20
78432

ராசி சீட்டிழுப்பு வாரம் 4158 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.05.11 தினம் சனிக்கிழமை
01 09 44 55 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,541,503.20
202542

ஜய
N 24 28 31 44 50
113424
1622 சிவப்பு 11.05.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 522,089,823.40

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை வெற்றி வாரம் : 2272 சீட்டிழுப்பு திகதி : 2024.05.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 112,342,704/-
06 09 52 73 S
237526

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரகம் தேவை

54 வயதுடைய B- குருதி வகையைக் கொண்ட இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட பெண் ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவை. (713)

தொடர்புகளுக்கு:
076 575 1411
0039 34972 16435

## வீடு விற்பனைக்கு

புன்னாலைக் கட்டுவன், ஈவினையில் 17 பரப்பு, நாற்சார் வீடு 5 அறைகளுடன் கூடிய மாடி 95% வேலைகள் முடிவுற்ற வீடு விற்பனைக்கு. 125 பாக்கு மரங்கள், 40 தென்னை மரங்கள், 5 பலா மரங்கள், 10 வேப்ப மரம், 19 கயூ (7 பலன் தருபவை) மரங்கள், வற்றாத 20 அடி வெட்டுக் கிணறு, பலாலி பிரதான வீதியில் ஐயனார் கோவிலில் இருந்து 1/2 Km தூரத்திலும், தெற்கே நிலாவரை பிரதான வீதியிலும் இருந்து 1/2 Km தூரத்திலும் அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு 15 நிமிடங்களில் செல்ல முடியும். (703)

தொடர்புகளுக்கு: 077 3409 763

## CANADA VISA

- உங்கள் குடும்பத்துடன் பயணிக்கலாம்.
- வங்கி வசதிகள் செய்து தரப்படும்.
- 20 வருட அனுபவம், 1800 பேரை அனுப்பி வைத்துள்ளோம்.
- கிடைத்தவர்களை நேரடியாகப் பார்வையிடலாம். (511)

021 222 5686
076 424 7111
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகர் மத்தி மற்றும் யாழ் நகர் பகுதியில் இருந்து 5Km க்கு உட்பட்ட பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை. (C-0343)

076 187 4567

## இராஜ மருத்துவம்

வாதம், பாரிசவாதம், குத்துளைவு, கரப்பன், கிரந்தி, சொறி, வீக்கம், நோவு, சளி, தும்மல், பீநசம், நீரிழிவு கெர்ப்பவாயு, நெஞ்சுக்குத்து, நித்திரையின்மை போன்றவற்றிற்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள

பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர், T.P : 076 274 4488
வல்லை வீதி, சங்கானை (C-0347)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 264/= | Max 3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 180/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg அரிசி மா | - 200 | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 178/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 270/= | ~~330/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 1 Lux சோப் றோஸ் | - 145/= | ~~175/=~~ |
| 01 Baby Soap | - 115/= | ~~145/=~~ |
| 1 Sun பப்படம் | - 185/= | ~~210/=~~ |
| 400g Anlene அன்லீன் | - 1259/= | ~~1350/=~~ |

400g Anchor
995/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:-happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (735)

Happy Supermarket
0777 8080 30

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- தரகர் தேவையில்லை. (697)

077 88 62 927

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.

A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து (C-0348)

V2 GUEST 0743900360 0743900361


## V2 VISA SERVICES

கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0348)


# மரண அறிவித்தல்

பிறப்பு-1945.08.16 இறப்பு-2024.05.08

## அமரர்.திருமதி. ஜெயரட்ணம் குலநாயகி



யாழ்.அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட ஜெயரட்ணம் குலநாயகி அவர்கள் கடந்த 08.05.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார்,காலஞ்சென்ற கிருஷ்ணசாமி- பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா- மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும், கந்தையா ஜெயரட்ணம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மதேவி,சடாட்சரம், அருணகிரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயலக்ஷ்மி (லண்டன்), ஜெயரஞ்சன்(லண்டன்), ஜெயசங்கர்(சுவிஸ்),ஜெயந்தி(சூட்டி- சுவிஸ்), ஜெயசுதா(சுவிஸ்), ஜெயகௌரி(ஜேர்மனி), ஜெயசித்ரா(கொலன்ட்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணபதிப்பிள்ளை, சூரியகுமார், ஞானமொழி(கீதா), மோகனசர்மா ஜெயரூபன், சிறீதாசன், அனுஷன் ஆகி யோரின் அன்பு மாமியாரும்,ஜென்சிகா, நிரூபன், ஜெஜீவன், அஜீனா, ஜெனிஸ், உமாசுத சர்மா, சுபாஸ்கான், சகானா, ஜெனீஷா, சுபிட்சனா, சுகிர்தன், சகீரா, ஜெலினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.05.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 08.00 மணிமுதல் மு.ப 10.00 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் அளவெட்டி வடக்கு மணல்பிட்டி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பண்டத்தரிப்பு,தெல்லிப்பழை வீதி,
பன்னாலை. (711)

தகவல்- குடும்பத்தினர்.

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org